பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 25 புதன்கிழமை (11-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:15

## ஈ.பி.டி.பியை வெளியேறக் கோரி

# ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மீது நெல்லியடியில் பொலீஸ் தாக்குதல்!

## துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப் புகையினால் எண்மர் காயம்! வர்த்தகர்களைத் தேடித் தேடி தாக்கியதாகக் குற்றச்சாட்டு!!



தலையில் சுடப்பட்ட நெல்லியடி வர்த்தகர். *(மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்)*

வடமராட்சி,டிசெம்பர்11

**ஈ.பி.டி.பியினரை வெளியேறுமாறு கோரி நெல்லியடியில் உள்ள அக்கட்சியின் அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது பொலீஸார் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.**

**துப்பாக்கிச் சூடு நடத்தியும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஏவியும் பொலீஸார் நடத்திய தாக்குதல்களினால் பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர்.**

**ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வெளியே - நெல்லியடி நகரப் பிரதேசத்தில் பொதுமக்களை - குறிப்பாக வர்த்தகர்களை - பொலீஸார் தேடித் தேடித் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.**

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதும் தொடர்ந்து பொதுமக்கள், வர்த்தகர்கள் மீதும் கண்டபடி தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் நெல்லியடி நகரப் பகுதியில் நேற்றுப் பெரும் களேபரம் ஏற்பட்டது. பதற்றமும் பீதியும் பல மணி நேரங்கள் நீடித்தன.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் - நெல்லியடி பொலீஸ் நிலையம், இராணுவ சிவில் நிர்வாக அலுவலகம் ஆகியன முன்பாக உள்ள ஈபிடிபி அலுவலகத்திலிருந்து ஈபிடிபியினரை வெளியேறுமாறு கோரி நூற்றுக்கணக்

(14 ஆம் பக்கம் பார்க்க)



'பெயின்ற்' வாங்க வந்தவேளை கடைக்குள் வைத்து சுடப்பட்ட குடும்பஸ்தர். *(படங்கள்:பத்மறாஜ், வசந்தன்)*

# கடைக்குள் நுழைந்து பொலீஸார் சுட்டனரா?

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரிக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.11

நேற்று நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது வர்த்தக நிலையங்களை நோக்கி நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து மனித உரிமைகளள் ஆணைக்குழு விசேட கவனம் எடுத்து விசாரணை நடத்தும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அதிகாரி ஆர்.பி. சந்திரசேகரா இவ்வாறு நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். நெல்லியடியில் சம்பவம் நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டு பலருடனும் உரையாடிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் ஆர்ப்பாட்டம் நடந்த இடத்துக்கு தொலைவில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் இருந்த இருவர் படுகாயமடைந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் மிக நெருக்கமாக வைத்து தலையில் சுடப்பட்டார் என்று கூறப்படுகிறது. இது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு முறைப்பாடு கிடைத்திருக்கிறது. இந்த முறைப்பாட்டை தலைமையகத்துக்குத் தெரிவித்திருக்கிறோம்.

வர்த்தகர்களை பழிவாங்கும் விதமாக பொலீஸார் திட்டமிட்டு அவர்கள்மீது தாக்குதலை நடத்தினர் என்றும் ஆணைக்குழுவுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயமாகும். இது பற்றி ஆணைக்குழு விசாரணை நடத்தும். இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார். (ஐ)

### அதிர்ச்சியும் கண்டனமும்

யாழ்ப்பாணம்,டிசெ.11

மனித உரிமைகள் தினமான நேற்று நெல்லியடியில் பொது மக்கள் மீது நடத்தப்பட்டிருக்கும் கண் மூடித்தனமான தாக்குதல்கள் குறித்து பொது அமைப்புகள் பல அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்திருக்கின்றன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ்மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், வடமராட்சி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆகியன உட்பட பல அமைப்புகள் நேற்றிரவு கண்டன அறிக்கைகளை விடுத்தன. (ஐ)

# காயமடைந்தோர் விவரம்

நெல்லியடி,டிசெ.11

நெல்லியடிப் பகுதியில் நேற்று ஈ.பி.டி.பி அமைப்பினரை வெளியேறுமாறு கேட்டு பொது மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்தோரின் பெயர் விவரம் வருமாறு:-

★ கந்தர் பாலகிருஷ்ணன் (வயது 28) - கூல்பார் ஒன்றின் உரிமையாளரான இவர் தாவளை இயற்றாலையைச் சேர்ந்தவர். நெல்லியடி பிரதான வீதியில் உள்ள அவரது கூல்பாரினுள் வைத்து தலையில் சுடப்பட்டார். ஆபத்தான நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

★ தெய்வேந்திரன் சுதர்சன் (வயது 27) - நெல்லியடி முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த இவர் இரும்புக் கடையில் நின்ற சமயம் வெளியே இழுத்துச் சென்று தாக்கப்பட்ட பின் முதுகில் சுடப்பட்டார்.

★ சின்னத்தம்பி காசி விஸ்வ

(14 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை பூரண ஹர்த்தால்!

யாழ்ப்பாணம்,டிசெ.11

நெல்லியடியில் பொதுமக்கள்மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல்களைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பொலீஸாரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு ஒன்று திரண்ட எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாக நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்திருக்கிறது.

அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், தனியார் போக்குவரத்துச் சேவைகள், வங்கிகள், பஸ் போக்குவரத்து உட்பட அனைத்துத் தரப்பினரும் அன்றைய தினம் தமது சேவைகள், பணிகளை முற்றாக நிறுத்தி, ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருப்பதால் பரீட்சை எழுதச் செல்லும் மாணவர்கள், பரீட்சை தொடர்பான பணிகளில் ஈடுபடும் கல்வியியலாளர்கள் ஆகியோருக்கு எந்த இடையூறுகளும் ஏற்படாதவாறு நடந்துகொள்ளுமாறும் ஒன்றியம் கேட்டிருக்கிறது. (ஐ-5-12)

# வடமராட்சிப் பகுதியில் இன்று கடையடைப்பு!

வடமராட்சி,டிசெ.11

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற அடாவடித்தனமான தாக்குதல்களுக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவதற்காக வடமராட்சி பிரதேசத்தில் இன்று கடையடைப்பில் ஈடுபட வர்த்தக சங்கங்கள் முடிவு செய்திருக்கின்றன.

வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட நேற்றைய தாக்குதலை அடுத்து தங்கள் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படும் வரை தொடர்ந்து கடையடைப்பில் ஈடுபட நெல்லியடி வர்த்தக சங்கம் தீர்மானித்திருக்கிறது. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வரை கடைகளை மூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு நெல்லியடி வர்த்தக சங்கம் நேற்று மாலை அறிவித்தது.

வடமராட்சியில் இன்று நடைபெறும் முழு அடைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நேற்று மாலை ஒலிபெருக்கி மூலம் அங்கு அறிவிக்கப்பட்டது. (ஐ-173)

# சிறுவன் உட்பட 14 பேர் கைதாகி விளக்கமறியலில்!

## நேற்று நள்ளிரவு நீதிவான் முன் ஆஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.11

நெல்லியடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட 14 பேர் நேற்று நள்ளிரவு யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவின் இல்லத்தில் அவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பொலீஸ் நிலையம் மற்றும் ஈ.பி.டி.பி. அலுவலகம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவித்து பொலீஸார் இவர்களை ஆஜர் செய்தனர்.

14 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதையடுத்து அவர்கள் யாழ். சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் காயமடைந்த நிலையில் காணப்படும் ஐந்து பேர் இன்று யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படவுள்ளனர்.

பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் 14 பேரில் ஒருவர் சிறுவன் என்றும் ஏனையோர் இளைஞர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

14 பேரினதும் பெயர்கள் வருமாறு:-

★ சற்குணசிங்கம் ஜனார்த்தனன் (சிறுவன்)

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





நெல்லியடியில் நேற்று பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுவருவோரில் சிலரையும், நெல்லியடி நகர்ப் புறக் கடைகள் மூடப்பட்டு வீதி வெறிச்சோடி கிடப்பதையும் படங்களில் காணலாம். *(படம்:வசந்தன்)*

# சிங்களத்தில் பேசியபடி வந்த ஒருவர் கடைக்குள் புகுந்து கண்டபடி சுட்டார்!

## நெல்லியடியில் காயமடைந்தவர் விவரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11

கறுப்பு நீளக் காற்சட்டை மட்டும் அணிந்த ஒருவர் சிங்களத்தில் உரத்துக் குரல் எழுப்பியவாறு ஓடிவந்து கடைக்குள் புகுந்து துப்பாக்கியால் கண்டபடி சுட்டார். அப்போது துப்பாக்கிச் சன்னங்கள் என்னைத் தாக்கின.

நெல்லியடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் காயமடைந்த உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கக் கிளை முகாமையாளர் காசி. விஸ்வநாதன் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

நெஞ்சிலும், தோள் மூட்டிலும், தாடையிலும் குண்டு பாய்ந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் அவர், தனக்கு ஏற்பட்ட திகில் அனுபவத்தை விவரித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வீட்டுத் தேவைக்கு 'பெயின்ற்' வாங்குவதற்காக நேற்று நண்பகல் வேளை நெல்லியடி நகருக்குச் சென்றேன். பிரதான வீதி மூடப்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. உள்புற வீதியால் நகருக்குச் சென்று 'பெயின்ற்' கடைக்குள் நின்றேன். பிற்பகல் 2.15 மணியளவில் பிரதான வீதிப்பக்கம் சூட்டுச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்டன. மக்கள் அங்கிருந்து விரட்டப்படுவதை அறிந்தேன். அவ்வேளை, கறுப்பு நிற நீளக் காற்சட்டை மட்டும் அணிந்த ஒருவர் சிங்களத்தில் ஏதோ பேசியவாறு ஓடி வந்தார். நான் நின்றிருந்த கடைக்குள் துப்பாக்கியை நீட்டி சுட்டார். அப்போது எனக்கு காயங்கள் ஏற்பட்டன. பின்னர் ஆஸ்பத்திரிக்குச் கொண்டு செல்லப்பட்டேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஐ-15)

# பிரதி சபாநாயகராக சங்கரியை நியமிக்குக!

## பிரதமருக்கு மகேஸ்வரன் கடிதம்

பிரதி சபாநாயகர் பதவியை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரிக்கு வழங்குமாறு கேட்டு இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

பிரதி சபாநாயகர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாக உள்ளது. அப்பதவிக்கு தமிழர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ள மகேஸ்வரன், அப்பதவிக்கு வீ.ஆனந்தசங்கரியே பொருத்தமானவர் என்று சிபாரிசு செய்திருக்கிறார்.

இதேவேளை -

தமிழர் ஒருவரை பிரதிசபாநாயகராக நியமிக்கும் தனது கோரிக்கைக்கு ஐ.தே.க. எம்.பிக்கள் பெரும்பாலானோர் முழு ஆதரவு வழங்க முன்வந்திருக்கின்றனர் என்றும் -

கட்சி எம்.பிக்களின் அடுத்த கூட்டத்தில் இது தொடர்பான பிரேரணை ஒன்றைக் கொண்டுவர இருப்பதாகவும் -

அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ)

# பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்குவது பற்றிப் பரிசீலனை

## நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர்

கொழும்பு,டிசெ.11

கொடுமையான பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் நீக்கப்படலாம் அல்லது தனி மனித உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் திருத்தப்படலாம். இந்தத் தகவலை நீதி, சட்ட மறுசீரமைப்பு, புத்தசாசன அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நடைமுறையில் பயங்கரவாத தடுப்புச்சட்டம் பயங்கரமானது. அதன் கீழ் எவரும் கைதுசெய்யப்பட்டு கொடூரமாக நடத்தப்படலாம். இவ்வாறான சட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு மனித வாழ்வுக்குப் பொருத்தமான சட்டக்கோவை ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் சொன்னார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'மனித உரிமைகள்' தொடர்பான இணையத்தளம் நேற்று நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேராவினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் லொக்குபண்டார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைப்பது, பிணை வழங்குவது ஆகிய சட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். இங்கு கட்சிபேதமின்றி செயற்பட்டுச் சட்டத்தைத் திருத்துவது அவசியம் என்றார்.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பேசுகையில் - நாட்டின் இனப்பிரச்சினைக்கு மனித உரிமைகளின் அடிப்படையில் தீர்வு காணப்படும். அதற்கு நாட்டில் அரசமைப்பு முழுமையாகத் திருத்தி அமைக்கப்படும். மனித உரிமை பாதுகாப்பு பொறிமுறையில் இல்லாமல் செயலில் அமைய வேண்டும் என்றார்.

இந்த வைபவத்தில் மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# மனித உரிமைகள் தினத்தை ஒட்டி யாழ்.நகரில் நேற்று ஊர்வலம்!

யாழ்.குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதையும், 96-97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக இது வரை எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததைக் கண்டித்தும் மனித உரிமைகள் தினமான நேற்று மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். நகரில் பேரணி ஒன்றை நடத்தியது.

நேற்று முற்பகல் 10 மணியளவில கோவில் வீதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு முன்பாக இருந்து புறப்பட்ட பேரணி, கோயில் வீதி - ஆஸ்பத்திரி - கண்டி வீதியூடாக சோமசுந்தரம் அவனியூவில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தை அடைந்தது. அங்கு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுடன் இணைந்து கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், யாழ். இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகரவிடம் கையளித்தார்.

இதில் மதகுருமார்கள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் தென்னிலங்கையில் இருந்து யாழ்குடாநாட்டுக்கு வருகை தந்திருந்த பெண்கள் அமைப்பு ஒன்றைச் சேர்ந்தோரும் கலந்துகொண்டனர்.

(ஐ-8)

# அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஐ.நா.செயலாளர் அனான் பாராட்டு

## நிரந்தரத் தீர்வு ஏற்படுமென நம்பிக்கை

ஐ.நா.டிசெ.11

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுக்கள் வெற்றியளித் திருப்பதை ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் வரவேற்றிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிரந்தர தீர்வு எதிர்காலப் பேச்சுக்களில் எட்டப்படும் என்ற திடமான நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

ஐ.நா.செயலாளரின் இந்த வரவேற்பு குறித்து அவரது செய்தித் தொடர்பாளர் நியூயோர்க்கில் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஒஸ்லோ பேச்சுக்களில் காணப்பட்ட முன்னேற்றத்துக்காக ஐ.நா. செயலாளர் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே நாட்டிக்கும் பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்.

(ஐ)







மனித உரிமைகள் தினத்தையொட்டி நேற்று மனித நேய அமைப்புகளின் ஒன்றியம், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி உறுப்பினர்கள் நடத்திய அமைதி ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. *(படம்:தேவராஜன்)*

# ஈராக்கைத் தாக்குவதற்கு அமெ. ஆதரவு தேடுகின்றது

சியோல்,டிசெ.11

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பிரேரணைப்படி ஈராக் நடக்காமல் விட்டு ஒருவேளை அந்த நாட்டின் மீது போர் தொடுக்கவேண்டி ஏற்பட்டால் அதற்கான ஆதரவை ஆசியான் நாடுகளிடம் பெறும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

இதற்காக அமெரிக்க வெளியுறவுத்துறை பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் ஆசியான் நாடுகளுக்கான தனது இரண்டாவது விஜயத்தை ஆரம்பித்துள்ளார். ஜப்பானுக்கு சென்ற அவர் அங்கிருந்து தென்கொரியாவுக்கு வந்தார்.

தனது விஜயத்தின் ஆரம்பமாக ஆர்மிடேஜ் தென்கொரியாவுக்கு வருகை தந்துள்ளார். தலைநகர் சியோலில் நேற்று அவர் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களில் வடகொரியாவின் அணுஆயுதத் திட்டங்கள் குறித்த விவகாரமும் முக்கிய இடத்தைப் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்கொரியத் தலைவர் கிம் டே - ஜுங் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் லீ ஜுன் மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் சொய் சுங் - ஹொங் ஆகியோரையும் ஆர்மிடேஜ் சந்தித்துப் பேசினார். அமெரிக்காவுக்கு எதிரான போக்கு ஆசிய நாடுகளில் அதிகரித்து வருவது குறித்தும் இவர்களது பேச்சுக்களின் போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் -

ஆர்மிடேஜின் விஜயத்தை எதிர்த்து சியோலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் சுமார் 40க்கும் மேற்பட்ட எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்கக் கூடாது என்று அவர்கள் கோஷமிட்டனர்.




ஈராக்குக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா தம்மிடம் இருந்து எந்த குறிப்பிடத்தக்க உதவியையும் கோரவில்லை என்று சியோலில் அதிகாரிகள் கூறினர்.

இரண்டு நாள்கள் சியோலில் தங்கியிருக்கும் ஆர்மிடேஜ் பின்னர் அங்கிருந்து சீனாவுக்குச் செல்லவுள்ளார். அதன் பின்னர் காம்பரா நாட்டுக்கும் செல்லவுள்ளார்.

அமெரிக்காவுக்கு எதிரான கொள்கை ஆசிய நாடுகளில் தீவிரமடைந்துவருவதாக அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்திருந்தது. இந்நிலையில் ஈராக் மீது இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டால் அது அமெரிக்க எதிர்ப்பு மேலும் மேலும் வளர வாய்ப்பாகிவிடும் என்று வாஷிங்ரன் கருதுகின்றது. எனவேதான் ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எதையாவது மேற்கொள்வதற்கு முன்னர் ஆசியாவில் பலம் வாய்ந்த பொருளாதார நாடுகளாக விளங்கும் ஆசியான் அமைப்பில் உள்ள நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் அமெரிக்கா கவனம் செலுத்துகின்றது.

இதற்கிடையில் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைக்கான தயார்ப்படுத்தல்களை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. (ம)

## ஈராக் மீது போர் தொடுத்தால் பெரும் அழிவு வரும்


நோபல் பரிசைப் பெறுவதற்காக ஜிம்மி காட்டர் (இடது) ஒஸ்லோ வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

ஒஸ்லோ,டிசெ.11

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் அது பெரும் அழிவுக்கு வழிவகுக்கும்.

- இவ்வாறு அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி காட்டர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு காட்டருக்கு வழங்கப்பட்டது தெரிந்ததே. அதனைப் பெறுவதற்காக அவர் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவுக்கு வந்திருந்தார். அப்போதே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அதிபர் புஷ் ஈராக் விவகாரத்தைக் கையாளும் விதத்தையும் அவர் குறை கூறினார். (ம)

உலக அரங்கில்

## ஈராக் ஆயுத விவரங்கள்: ஐ.நாவின் முடிவுக்கு சிரியா கடும் கண்டனம்

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களிடம் ஈராக் கையளித்த 12 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆயுத விவரங்கள் அடங்கிய அறிக்கையை அப்படியே பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை நாடுகள் ஐந்திடமும் வழங்குவது என்று ஐ.நா. எடுத்த முடிவை பாதுகாப்புச் சபையின் சாதாரண உறுப்புரிமை நாடான சிரியா கடுமையாகக் கண்டித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளில் ஒன்றான சிரியாவே அரபு நாடுகள் சார்பில் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஒரே நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், அணு ஆயுதங்கள் பற்றி 2 ஆயிரத்து 100 பக்கங்கள் அடங்கிய முழு அறிக்கையின் பிரதிகளை அமெரிக்கா, பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் வழங்கியுள்ளது.

ஈராக்கின் ஆயுத விவரங்கள் இவ்வாறு ஐந்து நாடுகளிடம் முழுமையாகக் கையளிக்கப்பட்டது குறித்து பாதுகாப்புச் சபையின் ஏனைய உறுப்பு நாடுகள் சிலவும் அதிருப்தி அடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

## சார்க் மாநாடு அடுத்த மாதத்துக்கு பிற்போடப்பட்டது!

இஸ்லாமாபாத்,டிசெ.11

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க்கின் மாநாடு பிற்போடப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. அனேகமாக அது அடுத்த மாதம் நடக்கலாம் என்று இஸ்லாமாபாத் தெரிவித்துள்ளது. அயல் நாடான இந்தியாவும் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வசதியாகவே இந்த மாற்றம் செய்யப்பட்டதாக இஸ்லாமாபாத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளுமா இல்லை என்ற தகவல் கிடைக்காததன் காரணத்தால் மாநாட்டைப் பின்தள்ளிப்போடவேண்டி ஏற்பட்டது என்று தெரிவித்துள்ளது.(ம)

## அமெரிக்கா – சீனா இடையே உயர் மட்ட இராணுவப் பேச்சு

நியூயோர்க்,டிசெ.11

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையில் முதற்றடவையாக உயர் மட்ட இராணுவப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. வாஷிங்ரனில் நேற்று நான்கு மணி நேரம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.


கடந்த ஏப்ரல் மாதத்தில் தரையிறக்கப்பட்ட அமெரிக்க விமானம் சீனத்தளத்தில் பாகங்களாக்கப்பட்டபோது...

இந்தப் பேச்சுக்கள் பயனுள்ளவையாகவும் வெளிப்படையானவையாகவும் இருந்தன என்று புஷ் நிர்வாகம் தெரிவித்திருக்கின்றது.

இருதரப்பினருக்கும் இடையில் நல்லதொரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குரிய உண்மையான கலந்துரையாடலாக இந்தப் பேச்சுக்கள் அமைந்திருந்தன என்று அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனின் மூன்றாம் நிலை அதிகாரியான டக் பெய்த் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்க உளவு விமானம் ஒன்றை சீனா தனது நாட்டில் தரையிறக்கி பின்னர் அதனைப் பாகங்களாகப் பிரித்து அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்பியது முதல் சீர்குலைந்திருந்த அமெரிக்க - சீன உறவுகளில் இந்தப் பேச்சுக்கள் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சீனா தனது இராணுவத்தை நவீனமயப்படுத்தி வருவது, பெய்ஜிங்கின் சனத் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களும் அதிலுள்ள பிரச்சினைகளும், தாய்வானுக்கு எதிராக சீனா ஏவுகணைகளைத் தயாரித்தல் ஆகிய மூன்று விடயங்களுக்கு இந்தப் பேச்சுக்களின் போது அமெரிக்க அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுத்தனர். தாய்வானுடனான அமெரிக்காவின் உறவு குறித்த விடயத்துக்கு சீனா முக்கியத்துவம் கொடுத்தது.

ஆனால், வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டத்தை நிறுத்துவதில் அமெரிக்கா, சீனா மற்றும் ஏனைய நாடுகள் அதிக ஆவல் கொண்டுள்ளன என்று பெய்த் தெரிவித்தார். நேற்றைய பேச்சுக்களின் போது ஈராக் விடயம் பற்றியும் இரு தரப்பினரும் பேசியதாகவும் அவர் மேலும் சொன்னார். (ம)

## பிரேஸிலில் மண்சரிவு 36பேர் உயிரிழந்தனர்!

றியோ டி ஜெனிரோ,டிசெ.11

பிரேஸிலின் கிழக்குப் பகுதி கரையோர நகரப் பகுதி ஒன்றில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 36பேர் உயிரிழந்தனர்; மேலும் 50பேரைக் காணவில்லை; ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். ஒரே நாள் இரவில் இந்த அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன.

தலைநகர் றியோ டி ஜெனிரோவில் இருந்து 160 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அங்ரா டொஸ்றிஸ் என்ற நகரிலேயே இந்த அனர்த்தங்கள் இடம்பெற்றன.

மீட்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. ஆனாலும், காணாமற்போனவர்களில் எவராவது உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை என்று மீட்புப் பணி அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த இரு மாதங்களாகத் தொடர்ந்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் கரைபுரண்டு ஓடியதை அடுத்தே இந்த மண்சரிவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பல வீடுகளும் வங்கிகளும் வீதிகளும் மண்சரிவால் மூடப்பட்டு சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

மேலதிக மீட்புக் குழுக்களும் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனாலும் நகரத்துக்குச் செல்லும் பிரதான பாதை மண்சரிவால் துண்டிக்கப்பட்டுள்ளதால் மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்த இயலவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதி பிரேஸிலின் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களில் ஒன்று. இங்கு நூற்றுக்கணக்கான சிறுசிறு தீவுகளும், அழகிய கடற்கரைகளும் இருக்கின்றன. (ம)




3ஆம் ஆண்டு நினைவுகள்



பிறப்பு 09 - 02 - 1940

மறைவு 15 - 12 - 1999

திருமதி. தேவராணி சுந்தரலிங்கம்

திதி : 11.12.2002

உள்ளத் தொளியாய், உறவணைப் பேறாய், உயர்த்தும் ஏணியாய், உயிரினுக்குயிராய், உலவிய உத்தமி, இவ்வுலகம் விட்டு, ஏகி மூன்றாண்டுகள் கண்ணீரால் நனைந்து கரைந்தன. வாழ்க்கையின் ஒவ்வோர் அடியும் அகத்தைப் பிழிந்து அவலத்தை நிரப்பி ஆக்கிரமிக்கின்றது. அடிசிற்கினியாளே அன்புடைய மாதே படிசொற் தவறாத பாவாய் என்ற வள்ளுவன் வாக்கை, எள்ளளவும் பிசகாத பொருத்தமுடைப் பெண்ணணங்கே! பேதலிக்கும் உள்ளத்தோடு பெரும் புயலிற் சிக்குண்டு, உதிரம் கொட்டும் உள்ளத்தராய், ஆஸ்த்திக்கொரு மகவாம் சுதர்சனும் அவர் கரம் பற்றிய இரத்தினேஸ்வரியும், ஆசைக்கொரு மகவு சுபாசினியும் அவர்கரம் பற்றிய செல்வவிநாயகமும் அன்புப் பேரன் அஜித்தும் உடல் இரண்டாய் உயிரொன்றாய் உலவிய யானும் இழப்பிற் பெரிய இழப்பாய் நின்பிரிவால் உதிர்க்கும் நயனநீர் வங்கக் கடலை மேலும் உவர்ப்பாக்கி நிற்கிறதே!

'செல்வானந்த வாசா'
இணுவில் மேற்கு,
இணுவில்

(C/25...)

மறக்கலாத்றா
அன்புத் துணைவன்
இரா.சுந்தரலிங்கம்

TVS

# தேர்ந்தெடுப்பதில் ஈடு இணையற்றது




**Champ** ரூபா.33,500/- + VAT

50 CC, 2 ஸ்ட்ரோக், காற்றோட்ட குளிருட்டப்பட்ட இயந்திரம், அதிபலம் வாய்ந்த குழாய் போன்ற சட்டம்.




**MAX 100 R** ரூபா.59,000/- + VAT

100 CC, 2 ஸ்ட்ரோக், மின்மயப்படுத்தப்பட்ட, 12V மின்சார ஒழுங்குமுறை, பலம் வாய்ந்த சஸ்பென்ஷன், பெரிய பிரேக் டிரம்




**XL Super** ரூபா.41,750/- + VAT

70 CC, 2 ஸ்ட்ரோக், சக்திவாய்ந்த பல்சக்கரம், 12V மின்சார ஒழுங்குமுறை, உதைத்தல் மூலம் ஸ்ட்டாட் செய்தல்




**Victor** ரூபா.82,000/- + VAT

110 CC, 4 ஸ்ட்ரோக், ஒவ்வொரு மைலுக்குமான சிக்கனச் செலவு. 12V மின்சார ஒழுங்குமுறை, பலதடவை பிரதிபலிக்கும் முகப்பு விளக்கு.




**XL Super HEAVY DUTY** ரூபா.44,000/- + VAT

70 CC. 2 ஸ்ட்ரோக். பிரிக்கக்கூடிய பிளவுபட்ட இருக்கை, 12V மின்சார ஒழுங்குமுறை, அதிசக்தி வாய்ந்த உட்கிரகிப்புகள், (SHOCK ABSOBERS) உதைத்தல் மூலம் ஸ்ட்டாட் செய்தல்




**Fiero** ரூபா.120,000/- + VAT

150 CC, 4 ஸ்ட்ரோக், டிஜிட்டல் எரிபொருள் எரிவு, ஊஏ காபியுரேடர், உயர்தர சஸ்பென்சன், கைப்பிடியில் அதிர்வை குறைக்கும் டேம்பர்ஸ், 12V மின்சார ஒழுங்குமுறை

## நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்:

● அக்கரைப்பற்று - அக்கரைப்பற்று மோட்டர் வேர்க்ஸ் ● அம்பலன்தோட்டை - ருகுணு மோட்டர் ஸ்டோர்ஸ் ● அநுராதபுரம் - வசந்தா மோட்டர்ஸ், ● ஆராய்ச்சி கட்டுவ - சிங்கிரி ஸ்டோர்ஸ (Pvt) Ltd ● அறநகன்வில - ரிலயபல ஆக்ரோ கெமிகல் மோட்டர் ட்ரேடர்ஸ் ● பதுளை - சூப்பர் ஸ்பீட் மாஸ்டர்ஸ ● பண்டாரகம - மோகன் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் ● பட்டபொல - D.J. ட்ரேடிங்ஸ் கம்பனி, பிறைவேட் லிமிட்ட ● மட்டக்களப்பு - பெட்டசன் அன் சன்ஸ் ● எம்பிலிப்பிட்டிய - யுனியன் மோட்டர்ஸ் ● எப்பாவெல - உ.ஜே.எச். மோட்டர்ஸ் ● காலி - ஹெண்டி ஹேவா மோட்டர்ஸ், ● அம்பாந்தோட்டை - ரீமா என்டர்பிறைசஸ் ● ஹிங்குறக்கொட - ஜானக என்டர்பிறைசஸ் ● ஹோமாகம - லக்மாலி என்டர்பிறைசஸ் ● ஹொறண - விஜயா றேடியோ இண்டஸ்ரீஸ் ● ஹொறவப்பத்தானை - சந்தன மோட்டர்ஸ் ● யாழ்ப்பாணம் - சுசுக்கி ட்ரேடர்ஸ், யசோ மோட்டர்ஸ் ● கண்டி - நியூப்றி லங்கா சில்வரின் ஏஜன்சீஸ் ● கந்தளாய் - ரணவீர ஸ்டோர்ஸ் ● கட்டுநாயக்கா - ரணதுங்க மோட்டர்ஸ் ● கட்டுநேரிய - S.R.L. மோட்டர்ஸ், ● கொச்சிக்கடை - நீகல் மோட்டர்ஸ் ● கெப்பிட்டிகொலாவ - விஜயசிங்க மோட்டர்ஸ் ● குளியாப்பிட்டிய - வின்டொம் மோட்டர்ஸ் ● குருநாகலை - ஸ்பெக்ட்ரா டிஸ்ட்றிபியூடர்ஸ் ● மாத்தறை - கஜநாயக்க மோட்டர்ஸ், M & J என்டர்பிறைஸஸ் ● மொனறாகலை - பத்மா றேடியோ ● நிக்கவரெட்டிய - மீவெலவ எலக்ட்ரோனிக்ஸ் ● பொலன்னறுவை - யுனைட்டட் போல்ட் & அக்சஸ்சோரிஸ் பிறைவேட் லிமிடெட் ● றன்ன - றண்முத்து மோட்டர்ஸ் ட்ரேடர்ஸ், ● இரத்தினபுரி - சிறிலக் பேன்ஸி ஹவுஸ் ● தங்காலை - சாரங்க என்டர்பிறைஸஸ் ● தமைமல்வில - வீரசிங்க மோட்டர்ஸ் ● திஸ்ஸமாறாமை - சென்ரல் சைக்கிள்ஸ் ● திருகோணமலை - ரணவீர ஸ்டோர்ஸ் ● வவுனியா - ஹோண்டா மோட்டர்ஸ் ● வலஸ்முல்ல - தர்ஷன் மோட்டர்ஸ் ● வெலிமட - ஜெமினி மோட்டர் ஸ்டோர்ஸ்

மேலதிக விபரங்களுக்கு, எமது ஏக விநியோகஸ்த்தர் :

**சுசுக்கி மோட்டர்ஸ் லங்கா லிமிட்டட்டுடன் தொடர்பு கொள்ளவும்.**

795, சிறிமாவோ பண்டார நாயக்கா மாவத்தை கொழும்பு -14ல் உள்ள

தொலைபேசி: 542883-5 பெக்ஸ்: 440889

உதயன்

## நாங்கள் தயார்; நீங்கள் தயாரா?

இரண்டு தசாப்த காலம் நாட்டை உலுக்கிவரும் இனப்பிரச்சினைக்கும் இனப்போருக்கும் சமஷ்டி ஆட்சிமுறையின் கீழ் சமரசத் தீர்வு காண்பதற்கான அடிப்படை இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக இலங்கை அரசுத் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் நல்லிணக்கம் வரலாற்றில் புதியதொரு திரும்புமுனையாகும்.

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு பிராந்திய சுயாட்சி வழங்கப்படும். இதற்காக சமஷ்டி முறையின் கீழ் கூடுதலான நிர்வாக அதிகாரங்களை கொண்ட பிராந்திய சுயாட்சி ஒன்று உருவாக்கப்படும். அதற்கு ஏற்ற வகையில் முற்றிலும் மாறுபட்ட புதிய அரசமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்படும் - இப்படி அமைச்சரவைப் பேச்சாளரும், சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரசுத் தரப்புக் குழுவின் தலைவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்திருக்கின்றார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது, 1995ஆம் ஆண்டிலும் 2000 ஆம் ஆண்டிலும் இரண்டு தீர்வுத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டதையும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அந்தத் தீர்வுத் திட்டங்கள் தன்னிச்சையாகவே உருவாக்கப்பட்டவை. அதனால் அவை வெற்றிபெறவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அந்தத் தீர்வுத் திட்டங்களை அப்போது கொண்டுவருவதற்குப் பொறுப்பாக இருந்தவர் இந்த ஜி.எல்.பீரிஸ்தான். அச்சமயம் அவர் பொ.ஐ.முன்னணியின் தூணாக இருந்தார். தீர்வுத்திட்டங்கள் மற்றும் அரசமைப்பு விடயங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் வலதுகரமாக விளங்கினார்.

தமிழர் தரப்பின் இணக்கம் இன்றி, முன்வைக்கப்படும் தீர்வு யோசனை ஏதும் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரப்போவதில்லை என்பது அப்போது பல தரப்பினராலும் அடித்துக்கூறப்பட்டது. ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் 'ஸ்டன்ட்' நடவடிக்கையாக அந்தத் தீர்வுத்திட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டன. எதிர்பார்த்தபடி அந்த அரசியல் 'ஸ்டன்டுகள்' முளையிலே கருகிவிட்டன.

அந்த அரசியல் வித்தைகளை அரங்கத்துக்குக் கொண்டுவந்த அமைச்சர் பீரிஸே அவற்றின் தார்ப்பரியத்தை இப்போது அம்பலப்படுத்துவது முக்கிய விடயமாகும்.

இம்முறை தமிழர் தரப்புடன் - விடுதலைப் புலிகளுடன் - கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து, அவர்களின் இணக்கத்துடனேயே புதிய தீர்வுத் திட்டத்தை தாம் செயற்படுத்தவிருப்பதால் அது வெற்றியீட்டும் என்று நம்பிக்கையை வெளியிடுகின்றார் அமைச்சர் பீரிஸ்.

தங்களின் இனத்தின் சுதந்திரத்துக்காக தனிநாடு கோரியவர்கள் தமிழர்கள். 1977 இல் பொதுத் தேர்தலில் தமது வாக்குரிமை மூலம் அதை சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்தியவர்கள் அவர்கள். அதற்காக தங்கள் உயிரையும், உடைமைகளையும் ஈகம் செய்து தியாகப் போராட்டங்களை நடத்தியவர்கள் அவர்கள்.

அத்தகைய தமிழர்கள் அமைதி வழியில் சமாதானத் தீர்வு காணும் தங்களின் ஆவலை சர்வதேசத்துக்கும் இப்போது வெளிப்படுத்தும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண இணங்கியுள்ளனர்.

தனியரசு கேட்டவர்கள் கூட்டரசுக் கோரிக்கையைக் கூட வலியுறுத்தாமல், காலத்தின் தேவையையும் உலக அரசியல் போக்கையும் கருத்திற்கொண்டு ஐக்கிய இலங்கையில், சமஷ்டி ஆட்சி முறையில் மத்திய அரசுடன் அதிகாரத்தை சரிவரப் பகிர்ந்துகொள்ள முன்வந்திருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய விட்டுக்கொடுப்பு!

இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை அரசு சரிவரப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அமைச்சர் பீரிஸ் கூறும் விதத்தில் புதிய அரசமைப்புக்கும், அதன் கீழ் அதிகாரப் பகிர்வுக்கும் இணங்கவேண்டும்.

இணக்கத் தீர்வுக்குத் தமிழர்கள் தயார்; சிங்களவர்கள் தயாரா?

# புலிகளின் காவல் நிலையங்கள் நீதிமன்றங்களை அகற்றமுடியாது!

## என்கிறார் பாதுகாப்பு அமைச்சர்

புலிகளின் காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள் ஆகியவை பற்றி இப்போது அதிகம் பேசப்படுகிறது. அவை எல்லாம் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. அவற்றைப் பலாத்காரமாக அகற்றமுடியாது. அவர்களுடன் பேசிப் படிப்படியாக முடிவுகாணவேண்டிய விடயம் அது. இப்படி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

பாதுகாப்பை மேம்படுத்துவதும் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணுவதும் எமது கடமையாகின்றது. நோர்வே அரசுக்கும் நாம் நன்றிகூறவேண்டும். அவர்கள் கண்காணிப்புக்குழுவின் பணிகளை மிகமதிநுட்பத்துடன் மேற்கொண்டுவருகின்றனர். சமாதானத்துக்கு அது வழிகோலுகின்றது.

விடுதலைப் புலிகளின் நீதிமன்றங்கள், பொலீஸ் நிர்வாகம் பற்றி பலரும் குறிப்பிட்டனர். இவை பல வருடங்களாக அங்கு நடைபெறும் விடயங்களாகும்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் புலிகளின் எதுவித நிர்வாகமும் இல்லை. 1997ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் இருந்த பொலீஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் யாவும் மூடப்பட்டன.

விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் நீதிமன்றங்கள், பொலீஸ்படை முதலானவற்றை பலாத்காரமாக அகற்றிவிட முடியாது. அதனைப் படிப்படியாகப் பேச்சுக்கள்மூலம் முன்கொண்டு செல்லவேண்டும். நிலைமையை எதிர்க்கட்சியினர் அமைதியாக அவதானிக்க முனையவேண்டும். நாட்டில் அமைதியைக் கொண்டுவரும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. அதற்கு ஆதரவு தந்து அனைவரும் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (ஒ)

# நல்லூர்ப் பொதுச் சந்தையில் வங்கிக் கிளை திறக்க கோரிக்கை

நல்லூர்,டிசெ.11

நல்லூர் பொதுச் சந்தைப் பிரதேசத்தில் வங்கிக் கிளை ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி வர்த்தகர்களின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான வர்த்தக நிலையங்களும், வர்த்தக நடவடிக்கைகளும் நிறைந்த இப்பிரதேசத்தில் வங்கிக் கிளை ஒன்று இல்லாதிருப்பது தமக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்துவதாக வர்த்தகர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நல்லூர் பொதுச் சந்தைப் பிரதேச வர்த்தகர்கள் தமது வங்கி நடவடிக்கைகளுக்கு தினமும் யாழ்நகரப் பகுதிக்கே சென்றுவர வேண்டி இருக்கிறது. இதனால் தாம் தினமும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையில் வர்த்தக நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருவதனால் தமது பகுதிகளில் வங்கிச்சேவை ஒன்று மிக அவசிய தேவையாக உள்ளது என அவர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை -

வங்கிக் கிளை ஒன்றைத் திறக்குமாறு வர்த்தகர்கள் சிலர் சில ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் வங்கி அதிகாரிகளிடம் கோரியிருந்தனர் என்றும் -

ஆனால், அக்கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படவில்லையென்றும் -

தெரிவிக்கப்பட்டது.

பொதுச் சந்தையில் தற்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கட்டடத் தொகுதியில் வங்கிக் கிளை ஒன்றை நிறுவுவதற்கும் இடம் ஒதுக்கப்பட இருப்பதால் குடாநாட்டில் இயங்கும் வங்கிகளின் எந்த ஒரு வங்கியாவது அதன் கிளை ஒன்றை அங்கு திறக்க முன்வருமானால் அது வர்த்தகர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருக்கும் என்று வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-ரி)

# தொழில் வங்கிப் பதிவுகள் மீண்டும் யாழ்.மாவட்டத்தில்

## பிரதேச செயலக ரீதியாக நடக்கும்

நல்லூர்,டிசெ.11

யாழ்.மாவட்டத்தில் படித்துவிட்டு வேலையற்று இருப்பவர்களை தொழில் வங்கியில் பதிவுசெய்யும் நடவடிக்கை மீண்டும் தொழில் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பதிவு நடவடிக்கைகளின்போது ஏற்படும் நெருக்கடிகளை தவிர்க்கும் நோக்குடன் இம்முறை பிரதேச ரீதியில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்நடைமுறைகளின்படி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிற்கும் குறிப்பிட்ட தினங்கள் ஒதுக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் -

இவை பற்றிய விவரங்கள் விரைவில் பத்திரிகைகள்மூலம் அறிவிக்கப்படவுள்ளதாகவும் -

தொழில் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (ஐ-ரி)

# நுண்கருத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி நடவடிக்கை

வலி.மேற்கு,டிசெ.11

அடுத்த ஆண்டு ஐ.நா. நுண்கருத்திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான முன்மொழிவுகளை இந்தமாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், உடுவில், சாவகச்சேரி ஆகிய ஏழு பிரதேச செயலர்களையும் கேட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டுக்கான நுண்கருத்திட்டத்தின்கீழ் குடிதண்ணீர் விநியோகம், சுகாதாரம், சூழல் சுகாதாரம், வீடமைப்பு, சமூகக் கட்டுமான அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, கடற்றொழில் அபிவிருத்தி ஆகிய செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வருமானத்தை பெருக்கும் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியடிப்படையில் குறிப்பாக 2001, 2002ஆம் ஆண்டுகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

இவை தொடர்பான முன்மொழிவுகள் துறை சார்ந்த நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும். (ஒ-175)

# மக்களின் ஆலோசனைகளுடன் அபிவிருத்தி, புனரமைப்பு திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.11

குடாநாட்டில் மக்களின் ஆலோசனைகளுடன் அபிவிருத்தி, புனரமைப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படவிருக்கின்றது.

இத்திட்டத்தை வகுப்பது தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் மூன்றுநாள்களுக்கு விசேட செயலமர்வு ஒன்று யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த கல்விமான்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பல்துறை சார்ந்தவர்கள் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை முன்வைக்கலாம் என்று யாழ். அரசஅதிபர் செ.பத்மநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றைக் கொண்டு, பொதுத்திட்டம் ஒன்று வகுக்கப்படவிருக்கின்றது.

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை, யாழ். அபிவிருத்தித் திட்டம் ஒன்றை முன்னர் தயாரித்திருந்தது.

அத்திட்டம் பொதுமக்களின் ஆலோசனைகளைப் பெறாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக பொதுமக்களின் ஆலோசனையுடன் புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நலன்விரும்பிகள் இந்தச் செயலமர்வில் மட்டுமன்றி தங்கள் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கலாம் என அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-3)

### நாளை

கார்த்திகை 26
வியாழக்கிழமை
(12.12.2002)
திதி : அட்டமி
பிற்பகல் 1.15வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 3.48வரை.
திருவெம்பாவை பூஜாரம்பம்
(உதயத்தின் முன்னர்)
சுபநேரம் : 7.50 - 9.20
ராகுகாலம் : 1.50 - 3.20
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஆயுதமின்றிப் போராடியவர்களைப் பார்த்திருக்கலாம். ஆனால், உணர்ச்சியின்றி வெற்றி பெற்ற மக்களை எவரும் பார்த்திருக்க முடியாது.

# தனியார் முகவர்களிடமும் மின்மானிக்குத் தட்டுப்பாடு

நல்லூர்,டிசெ.11

யாழ்ப்பாணத்தில் தற்போது மின்மானிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனைச் சீர்படுத்த மின்சாரசபை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

இலங்கை மின்சார சபையின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் மின்மானி விற்பனை முகவர் நிலையங்களில் விற்பனைக்கென மின்மானிகள் வழங்கப்பட்டுள்ள தனியார் மின்னியல் விற்பனை முகவர் நிலையங்களில் விற்பனைக்கென மின்மானிகள் இல்லாமையால் புதிதாக மின் இணைப்பை பெற உள்ளோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மின்சார சபை முன்பு மின்சாரம் பெற்றிருந்தவர்களுக்கு மட்டுமே மீளவும் மின் இணைப்பு வழங்கும்போது மின்மானியையும் பொருத்தி வழங்கி வருகிறது. அத்துடன் தமது அங்கீகாரம் பெற்ற, தனியார் மின்பொருள் விற்பனை நிலையங்களில் மட்டுமே புதிதாக மின்மானிகளை கொள்வனவு செய்யவேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

இந்தவேளை மின்மானிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க மின்சார சபை அவற்றை தானே பெற்று மின்பெறுவோருக்கு வழங்கவேண்டும் எனவும் -

அவ்வாறு முடியாத பட்சத்தில் மின்மானி விற்பனைக்கென மேலும் சில தனியார் விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் -

புதிதாக மின் இணைப்பை பெறுவோரின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஒ-ரி)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 31st December 2002 for the undermentioned posts:

1. VISITING INSTRUCTOR IN PHYSICAL EDUCATION FOR PHYSICAL EDUCATION UNIT.

*Badminton(Men)/Chess(Men)/Chess(Women)/Gymnastic(Men)/Karate (Men)/Table Tennis (Men)/Table Tennis (Women)/Tennis (Men) Thachchi(Men)/Volley ball (Men).*

Rate of payment Rs.75.00 per hour (Maximum of Rs.900/ per month)

Application forms and other details may be obtained from the Office of the Assistant Registrar/Establishments. University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs.20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the 'Bursar, University of Jaffna, together with a self-addressed stamped envelope 23X10 c.m. in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**09.12.2002**

(C/25324)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

வரணிப் பிரதேசத்தில் பொருளியல் மாணவர் பரம்பரையை உருவாக்கிய எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய முன்னாள் யா/வரணி மகா வித்தியாலய பொருளியல் அசிரியரும் தற்போது யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியருமான



## திரு.வல்லிபுரம் நடராசா

*(B.A.(Hons.), Dip. in Edu.; M.Ed., S.L.P.S. 2:1)*

அவர்கள் இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி அதிபர் தரம் 2:1இல் நியமனம் பெறுவதைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டும் என உளமார வாழ்த்துகின்றோம்.

**யா/வரணி மகா வித்தியாலயம்.**

பழைய மாணவர்கள்,
1999 உயர்தர
பொருளியல் மாணவர்கள். (11593)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 05 - 09 - 1921



உதிர்வு 11 - 11 - 2002

## அமரர் கயிலாயர் வேலாயுதர்

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

**திதி: 11.12.2002**

**அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்,**
**அவனியிலே வாழ்ந்த அன்புத் தெய்வமே!**
***உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

இன்று (11. 12. 2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சுமங்கலி,*
*பருத்தித்துறை வீதி, வரணி.*

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (11589)

# ஜே.வி.பியின் எம்.பி. யுத்த சன்னதம்

வடக்கு -கிழக்கு பிரச்சினையை சமஷ்டி ஆட்சிமுறையில் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைத் தமது கட்சி எதிர்ப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸ்ஸநாயக்கா தெரிவித்தார்.

யுத்தம் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். புலிகளை யுத்தத்தின்மூலம் தோற்கடிக்கவேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கு தற்போதைய அரசு கவிழ்க்கப்படவேண்டும். புலிகளுக்கு எதிரான யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும என அநுரகுமார திஸ்ஸநாயக்கா வலியுறுத்தினார்.

# கைதடிப் பகுதியில் நுளம்புத் தொல்லை

கைதடி,டிசெ.11

.மாரிகாலம் ஆரம்பித்திருப்பதையடுத்து கைதடிப் பகுதியில் நுளம்பின் தொல்லை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மலேரியா முதலிய நோய்கள் இப்பகுதியில் பரவ ஆரம்பித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

பெருகிவரும் நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களம் இதுவரை உரிய நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 2001ஆம் ஆண்டின் இறுதியில் கைதடிப் பிரதேசத்தின் சில பகுதிகளில் மட்டும் நுளம்புகளை அழிக்கும்பொருட்டு மருந்து விசிறப்பட்டது என்றும் -

ஏனைய பகுதிகள் பாராமுகமாகக் கைவிடப்பட்டன என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-75)

**வெளிவந்துவிட்டது!**

*"அஷ்டலக்ஷ்மி" தினத்தாள்*

**கலண்டருடன் 12 இராசிகளுக்குமான 2003ஆம் ஆண்டு புத்தாண்டு பலன் புத்தகம் இலவசம்!**

**கலண்டர் விலை ரூபா 170/-**

- *மேசை தினக்குறிப்பு*
- Pocket Diary

} தமிழில்


என்பனவும் கிடைக்கும்.

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
கண்டி வீதி, கைதடி.

(11373)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் செல்லையா திருநாவுக்கரசு (ஓவசியர்)

*(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரும், விஷகடி வைத்தியரும்*
மறவன்புலோ, சாவகச்சேரி)

*அன்னை மடியில்* 06-09-1932 | *அம்பாள் அடியில்* 11-11-2002

**உருகின்ற மெழுகாகி ஒளி ஊட்டினான் - அன்பில்**
**உருவாகி உயர்வுக்கு வழி காட்டினான்!**
**திருநாவுக் கரசென்று பெயர்சூடினான் - சக்தி**
**தேவியே சரண் என்று விழிமூடினான்!**

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளிலும் ஊர்வலத்திலும் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், உடன் தொழிலாற்றிய உத்தியோகத்தர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர், உள்ளூர், வெளியூரிலிருந்து தொலைபேசி, தபால், தந்திமூலம் ஆறுதல் கூறியோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எங்களோடு ஒன்றித்த உள்ளங்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரது மகள் திருமதி இராசரத்தினம் தயாநிதியின் இல்லத்தில் இன்று (11.12.2002) புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

***அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி அம்மனைப் பிரார்த்திக்கும்:***

*கல்ரெக்ஸ் லேன்,*
*கண்டி வீதி, சாவகச்சேரி.*

மனைவியும், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகளும். (11605)

சாமியே சரணம் ஐயப்பா



# யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு

# சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்

# மகரஜோதி மண்டல பூர்த்திவிழா

ஏழாம் வருட சபரிமலை யாத்திரையை முன்னிட்டு சபரீச ஐயப்பன் தேவஸ்தான குருசுவாமி **ஹரிகரசுதன் சுவாமி** அவர்கள் நடத்தும் ஸ்ரீதேவி குருகுல சபரிபீட குருசாமி **சாம்பசிவஜெகதீஸ்வர சிவாச்சாரியார்** அவர்களின் தலைமையில், யாழ்ப்பாணம் குருசுவாமிகள், கொழும்பு கிராண்பாஸ் குருசாமி **பாலரவிசங்கர சிவாச்சாரியார்**, மேட்டுத்தெரு மணிகண்ட சேவாபீட குருசாமி சாம்பசிவ **செந்தில்நாத சிவாச்சாரியார்**, அகில இலங்கை ஐயப்பன் தேவஸ்தானம் குருசாமி **ரவிந்திரகுமார், அ.இந்துதாசன்** குருசாமி அவர்களும மாலை அணிந்த ஐயப்பன்மார்களும் கலந்து சிறப்பிக்கும் மண்டல பூஜை விழா.

## கிரியா கால நிகழ்வுகள்

| | |
|---|---|
| 11.12.2002 | புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு 'கருப்பன்சாமி பூஜை','மலையாள பூஜை', 'பஜனை', 18ஆம் படி பூஜை என்பன இடம்பெறும். |
| 12.12.2002 | வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஜோதிபூஜை, பால்கூடபவனி, வில்வ அர்ச்சனை, மஞ்சமாதா பூஜை, குருசாமி பூஜை, பஜனை என்பன இடம்பெறும். |
| 13.12.2002 | வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு (மகிசி சம்கார (வேட்டைத் திருவிழா) பிராசித்த அபிஷேகம், பஜனை, 18ஆம் படி பூஜை என்பன இடம்பெறும். |
| 25.12.2002 | புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு சபரீச ஐயப்பன் ஆலயத்தில் வைத்து இருமுடி கட்டும் பக்தர்களுக்கு நெய்த் தேங்காயில் நெய் நிரப்பும் வைபவம் நடைபெறும். |
| 27.12.2002 | அன்று 41ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்து இருமுடி கட்டி யாத்திரையாக நடந்து வந்து அன்று மாலை சபரீச ஐயப்பன் ஆலயத்தில் வந்து 18ஆம் படி ஏறி நெய் அபிஷேகம் நடைபெறும். |

**இந்த விழாவில் அனைத்து பக்தர்களும் கலந்துகொண்டு உய்தி பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

*அனைவரும் வருக! ஐயப்பன் அருள் பெறுக!*

சபரீச ஐயப்பன் தேவஸ்தான குருசுவாமி
கி.ஹரிகரசுதன்சாமி.

(11591)

**பிரசுர அன்பளிப்பு: காரை மணிகண்டன்.**

# சமாதானம் எட்டப்பட்ட பின்னர் படையினரின் நிலை என்னாகும்?

**நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு தற்போது கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த முயற்சிகள் வெற்றியளித்து நிரந்தர சமாதானம் உருவாக்கப்பட்டால் முப்படைகளிலுமுள்ள படைவீரர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது ஒரு புதிய பிரச் சினையாக உருவாகக்கூடும். இந்த விடயம் குறித்து முப்படைத் தளபதிகள் மற்றும் இத்துறைசார் வல்லுநர்களின் கருத்தைத் திரட்டி “லக்பிம” வார இதழ் வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவத்தினர்மீது நடத்திய முதலாவது பாரிய தாக்குதல் சம்பவம் 1983 ஜூலை மாதம் 23ஆம் திகதி இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தவேளை, ஸ்ரீலங்கா காலாட் படையைச் சேர்ந்த லெப்டினன்ட் வாஸ் குணவர்த்தனா உட்பட 13 படைவீரர்கள் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கு



இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல | விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா | கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி | பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ

அண்மையில் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீலங்கா அரச தரப்பிலிருந்து 1983ஆம் ஆண்டுமுதல் இற்றைவரை இராணுவத் தளபதிகளான மேஜர் ஜெனரல் ரீ.ஐ.வீரதுங்க, லெப்டினன்ட் ஜெனரல் ஜீ.டி.ஜீ.என்.செனிவிரத்ன, ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டீ சில்வா, ஜெனரல ரோஹான் தளுவத்த, லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால வீரசூரிய மற்றும் தற்போதைய இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் யுத்தத்தில் தலைமைதாங்கி வழிநடத்தியுள்ளனர். இதைவிட விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகப் போரிட இந்திய அமைதிப்படை 1987 ஜூலை 23ஆம் திகதி இந்நாட்டுக்கு வந்து சேர்ந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு 1987 மே மாதம் 26ஆம் திகதி முதற்றடவையாக பெரிய அளவிலான தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தது.

கடைசியில் முப்படைகளையும் சேர்ந்த போர் வீரர்கள், பொலீஸார் மற்றும் ஊர்காவற்படையினர் என 14 ஆயிரத்து 098 பேர் போரில் கொல்லப்பட்டனர்.(அரசின் தகவல்களின்படி) 2 ஆயிரத்து 549 படையினர் காணாமற் போயுள்ளனர். இராணுவத்தில் மட்டும் 8 ஆயிரத்து 367 பேர் கடும் பாதிப்புக்குள்ளாகினர்.

1983 ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் 2001 டிசெம்பர் 31ஆம் திகதிவரை விடுதலைப் புலிகளின் தரப்பில் 32 ஆயிரத்து 500 பேர்வரை மரணமடைந்தனர்.(அரசின் தகவல்படி).

இந்த யுத்ததின்போது ஸ்ரீலங்கா மத்திய வங்கி, கட்டுநாயக்க விமான நிலையம், கொலன்னாவ மற்றும் ஊறுகொடவத்த ஆகிய இடங்களில் உள்ள எண்ணெய்க் குதங்கள் மற்றும் கலதாரி ஹோட்டல் போன்ற இடங்களில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் நேரடியாகப் பெரும் பாதிப்படைந்தது. அவ்விதமே, ஆர். பிரேமதாஸ, காமினி திசநாயக்க மற்றும் ரஞ்சன் விஜேரத்ன ஆகியோர் உட்பட பல அரசியல்வாதிகள், பல்தரப்பட்ட அமைப்புக்களைச் சேர்ந்த பல கல்விமான்கள், புத்திஜீவிகள் என்போரையும் இந்நாடு இழக்கநேர்ந்தது.

கண்டி தலதா மாளிகை மற்றும் அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதி ஆகிய பழைமை வாய்ந்த வணக்க ஸ்தலங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாலும், அரந்தலாவை பிக்குகள் படுகொலைச் சம்பவத்தாலும் பௌத்த மக்களிடையே விடுதலைப் புலிகள் தொடர்பாக வெறுப்பலைகள் தோன்றத் தொடங்கின.

இந்த யுத்தத்துக்கு முடிவுகாணும் நோக்கத்தில் முன்னர் ஆட்சிசெய்த ஐ.தே.கட்சி அரசுகளால் பல தடவைகள் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதாயினும், அவை கடைசியில் யுத்தத்தை மீண்டும் தொடர்வதற்கே வழி சமைத்தன. தற்போதைய புதிய அரசு பதவியேற்றதன்பின்னர் யுத்தத்தை நிறுத்திப் பேச்சுமூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்தது. இதன் பயனாக 2002 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நிரந்தர போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

போர்நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு 250 நாள்கள் கடந்த பின்னர் நாட்டில் நிரந்தர சமாதானம் இம்முறை எட்டப்படுமென்ற நம்பிக்கை மக்களிடம் தோன்றியுள்ளது. சமாதானம் தொடர்பாக முன்னைவிட தற்போது மக்களிடையே எதிர்பாப்பு உருவாகியுள்ளது. கொழும்பு நகரில் சோதனைத் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா செல்ல ஆரம்பித்துள்ளனர். 'வெசாக்' கொண்டாட்டங்களுக்காக பெருமளவிலான பொதுமக்கள் தலைநகருக்கு வந்து திரும்புகிறார்கள்.

சமாதானம் தொடர்பாக பெரும் எதிர்பார்ப்பு பொதுமக்களிடையே காணப்படுகிறது. சமாதானத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகளோடு தற்போது மற்றொரு பிரச்சினைக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. நிரந்தர சமாதானம் எட்டப்பட்ட பின்னர் ஆயுதப் படையினரை எவ்விதம் கையாள்வதென்பதே அப்பிரச்சினையாகும்.

பிரபல சமூக விஞ்ஞானியான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நந்தசேன ரத்னபாலா இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:- “யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும் பட்சத்தில் ஆயுதப் படையினர் எந்த வேலையும் அற்றவர்களாவதால் சமூகத்திற்துப் பாரமாகவே இருப்பர். வாலிபப் பருவம், விசேட ஆயுதப் பயிற்சி, உடல் ரீதியான வலிமை ஆகிய தகைமைகளால் சக்திமிக்க நிலையிலுள்ள படையினர் தமது கடமைகள் மட்டுப்படுத்தப்படுவதால் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட வாய்ப்புக்கள் அதிகரிக்கும்” என்கிறார்.

அமெரிக்க ஆயுதப் படையினர் வியட்நாம் யுத்தத்தில் பங்கேற்றபின் தமது நாட்டுக்கு மீண்டும் திரும்பியதன் பின்னால், அந்நாட்டில் குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்தமையையும் அவர் உதாரணங்காட்டியுள்ளார். இராணுவ வீரரொருவர் தற்போது மாதமொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத சம்பளம் பெறுகிறார். வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் கடமையாற்றி மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை வீட்டுக்குச் செல்லும் இராணுவ வீரரொருவர் ஒரு தடவையில் முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் ரூபாவரையான பணத்தை வீட்டுக்குக் கொண்டு செல்கிறார். யுத்தப் பிரதேசத்தில் பற்பல கஷ்டங்கள் அனுபவிக்க நேர்ந்தபோதும் ஊருக்குச் செல்லும்போது பெருமளவான பணத்தைச் செலவுசெய்யும் வாய்ப்பு அவருக்குக் கிட்டுகிறது.

யுத்தம் முடிவடைந்து இராணுவத்தினருக்கு தொழில் வாய்ப்பு குறைக்கப்படின் அவர்களுக்குப் பணத்தட்டுப்பாடு படிப்படியாக ஏற்பட இடமுண்டு.



பொ.ஐ.முன்னணிப் பிரமுகர் டி.எம்.ஜயரத்ன | கொழும்பு பல்கலைக் கழக அரசியல் பீட விரிவுரையாளர் தயான் ஜயதிலக | இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன | சிஹல உறுமய கட்சிப் பிரமுகர் சம்பிக்க ரணவக்க

பணம் தேடிக்கொள்ளும் நோக்கில் படைகளை விட்டுத் தப்பி ஓடும் படைவீரர்கள் களவு, கொள்ளை, கப்பம் பெறல் ஆகிய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க இயலாது. இவ்வகை நடவடிக்கைகளால் அதிக பணம் கிடைப்பதால் மதுப்பழக்கத்திற்குள்ளாகும் அவர்கள், அதன் பலனாக துர்நடத்தைகளில் ஈடுபடவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்பது

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

பேராசிரியர் நந்தசேன ரத்னபாலாவின கருத்தாகும்.

இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக படைவீரர்களுக்கு அவர்கள் தற்போது பெறும் சம்பளத் தொகையையே வழங்கி அவர்களை நாட்டின அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்திக்கொள்ளமுடியும் என ரத்னபாலா கருதுகிறார். இந்தவிதத்தில் விவசாய முயற்சிகள் மற்றும் நீர்ப்பாசன முயற்சிகளில் இனம் இராணுவத்தினரை ஈடுபடுத்த முடியுமென்பது அவரது நம்பிக்கையாகும்.

'கொழும்பில் நான் சந்தித்த ஸ்ரீலங்கா சிங்க ரெஜிமென்றைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் ஓய்வூதியம் பெறமுடிந்த தொழில் என்பதனாலேயே தான் இராணுவ சேவையைத் தெரிவு செய்ததாகக் குறிப்பிட்டார். ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த தன்னால் எழுதுவினைஞர் பரீட்சையிலேயோ, அன்றேல் தொழில் பெறும பொருட்டான வேறு எந்தப் பரீட்சையிலேயோ சித்தியடைய முடியாத நிலையில், இராணுவத்தில் சேர்வதால் மட்டுமே ஓய்வூதியத்துடன்கூடிய அரச சேவையில் இணைய முடிந்ததாகக் குறிப்பிட்டார். அதுமட்டுமன்றி இந்தநிலையில், தொடர்ந்து இச்சேவையில் பணியாற்றவே தான் விரும்புவதாகவும் அவர் கூறினார். முப்படைகளையும் நிர்வகிக்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்ததாகும். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சமாதானம் உருவாக்கப்பட்ட பின்னர் இராணுவம் தொடர்பான அத்தனை பொறுப்புக்களையும் பாதுகாப்பு அமைச்சே நிறைவேற்றவேண்டும். சமாதானம் எட்டப்பட்ட பின்னர் படையினரின தொழில் சம்பந்தமான பிரச்சினைக்கு ஏற்ற தீர்வுகாண்பதற்கான வேலைத் திட்டங்கள் இப்பொழுதே தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.' பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஒஸ்ரின் பெர்னாண்டோ, தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான ஏற்பாடுகளில பாதுகாப்புப் படையினருக்கு புதிய வகைகளில் பயிற்சியளித்து அவர்களைப் பலப்படுத்துவது தொடர்பாக அரசு மிகுந்த அக்கறைகாட்டி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் ஸ்திரமான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், சமாதானம் நிலைநாட்டப்படுவதால் மீதப்படுத்தப்படும் நிதியைப் பயன்படுத்தி படையினருக்கு நவீன பயிற்சிகள் வழங்கி பலம் பொருந்திய படையினராக்கும் திட்டம் வகுப்பதற்குச் சந்தர்ப்பம் வாய்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முப்படைகளிலும் சேவையாற்றும் படையினரில் நிரந்தரப்படையினர் மற்றும் தொண்டர் படையினர் என இரு பிரிவினர் உள்ளனர். தற்போது இராணுவத்தில் கடமையாற்றும் தொண்டர் பிரிவைச் சேர்ந்தோர் அதனைக் கைவிட்டுத் தமது பழைய பதவிகளை வகிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உதாரணமாக ஆசிரியர்கள், வைத்தியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் என பலதரப்பட்ட பிரிவினர் பலர் பாதுகாப்புப்படையில் தொண்டர் படையினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சமாதானம் எட்டப்பட்ட பின்னர் இவர்களது சேவை இராணுவத்துக்குத் தேவைப்படமாட்டாது எனவும் பாதுகாப்பு அமைச்சின செயலாளர் தெரிவித்தார்.

மேலும் முப்படைகளிலும் கடமையாற்றுவோரில் பற்பல திறமைகள் கொண்டவர்கள் கடமையாற்றுவதாக ஒஸ்ரின் பெர்னாண்டோவின் கருத்துகள்மூலம் தெரியவருகிறது. இப்படி மாணவர்களுக்கு தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனங்களில் பெருமளவிலான வெற்றிடங்கள் இருப்பதாகவும் தற்போதுள்ள தனியார் பாதுகாப்புச் சேவைகளில் இராணுவத்திலிருந்து விலக்கிச் சென்றோரே பெரும்பாலும் கடமையாற்றுவதாகவும் ஒஸ்ரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

சிஹல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக ரணவக்க எந்தவொரு நாடும் தனது தேசிய பாதுகாப்புக்காக பாதுகாப்புப் படைகளைப் பேணிவரவேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தார். மேலும், தற்போதைய சமாதான நடவடிக்கைகள் வெற்றியடையலாமென எண்ணினாலும் சமாதானம் எட்டப்பட்ட பின்னர் பாதுகாப்புப் படையைக் கலைத்து விடுவதற்கு எவ்வித அவசியமும் இல்லை என்பதோடு, நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் பாதுகாப்புப் படைகளைப் பேணிவரவேண்டியது அவசியமாகும் என்பதும் சம்பிக ரணவக்கவின கருத்தாகும்.

எந்தவொரு நாடும் நாட்டு மக்கள் சமூகத்தின் பொருளாதார மற்றும் உற்பத்தித் துறைகளில் எல்லாச் சந்தர்ப்பத்திலும் நவீன மயப்படுத்தலில் அக்கறைகாட்டிவரும் இன்றைய நிலையில், சமாதானம் எட்டப்படினும் சரி இல்லையாயினும் சரி, முப்படைகளையும் நவீன மயப்படுத்துவதன்மூலம் பலமடையச் செய்தல் அவசியமாகும். பல நாடுகளில் படைகளில் வீரர்களைச

**தமிழில்: வியெஸ்ரி**

சேர்த்துக்கொள்வதில் பல நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆனால், எமது நாட்டில் பல தடவைகள் தகுதியற்றவர்களே பெரும்பாலும் படைவீரர்களாகச் சேர்ந்துகொள்ளும் நிலைமை உருவாகியது. அதேபோன்று தேகாரோக்கியத் தகுதிகூட முறையாகக் கருதப்படவில்லை.

சிங்கப்பூரில் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவேளையில், அந்நாட்டுப் பாதுகாப்புப் படைகள் எப்போதும் பலமானதொரு நிலையிலேயே ஆட்சியாளர்களால் வைக்கப்பட்டிருந்தன. எனவே, நமது நாட்டில் சமாதானம் எட்டப்பட்ட பின்னர் முப்படைகளையும் கலைத்துவிடுவதற்கு இடமளிக்காமல் அவர்களை நாட்டின் உற்பத்திப் பெருக்க முயற்சிகளுக்குப் பயன்படுத்தவேண்டுமென்பதும் சம்பிக்க ரணவக்கவின் கருத்தாகும். தற்போது ஸ்ரீலங்கா இராணுவத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வரையிலான வீரர்கள் கடமையாற்றுகிறார்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் முப்படைகளிலும் ஆட்குறைப்புச்செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுமானால், அதனால் முதலில் பாதிக்கப்படுவது ஸ்ரீலங்கா இராணுவமே. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, “சமாதானம் எட்டப்பட்டு, இராணுவத்தினர் கடமையாற்ற வேண்டிய தேவை குறையுமாயின் அவர்களுக்கு வெளிநாட்டு அமைதிகாக்கும் படையில் கடமையாற்றச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க இயலுமெனக் கூறியுள்ளார். தற்போது அவர்கள் பெறும் சம்பளத்தை விட இதனால் அதிக சம்பளம் பெற முடியுமெனவும், வேறு பல சலுகைகளை பெற்றுக்கொள்ள இயலுமெனவும் தெரிவித்த இராணுவத் தளபதி, அவ்வாறு வெளிநாடுகளுக்கு அமைதிகாக்கும் படையில் கடமையாற்ற எமது இராணுவ வீரர்களை அனுப்புவதன்மூலம் எமக்கு வெளிநாடுகளின் மதிப்பும் கிடைக்கக்கூடியதாயிருக்கு மெனவும் தெரிவித்தார். அவ்வாறு இந்த நாட்டுத் சுமையற்ற வகையில் படைவீரர்களை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்த இயலுமெனத் தெரிவித்த லயனல் பலகல்ல இதற்கான ஒழுங்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக் காட்டினார்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பாடசாலை வான் சேவை

மூளாய், சுழிபுரம், சித்தங்கேணி ஊடாக யாழ்ப்பாணக் கல்லூரிக்கு தை மாதத்திலிருந்து வான் சேவை ஆரம்பமாக உள்ளது. 20.12.2002 இற்கு முன் தொடர்புகொள்ளவும். கி.முருகதாசன், பதிவாளர், வட்டுக்கோட்டை. (11611)

## திருமண சேவை

1964, பூரம், செவ்வாய் 4, B.Sc. Diploma ஆசிரியைக்கு ஏற்ற அரச/தனியார் துறையில் மணமகன் தேவை. சீதனம் உண்டு. மணமக்களின் தேவைக்கு தொடர்புகொள்ளவும்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(11615)

## இறைச்சிக் கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். Electronic நிறுவை. தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11227)

## விற்பனைக்கு

மில் பாவனைக்குரிய சகல பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.நாகேஸ்வரன், புத்தூர்ச் சந்திக்கு அண்மையில், புத்தூர். (11597)

## தவறிவிட்டது

383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைச் சேர்ந்த சு.கோபாலகிருஷ்ணனின் கைப்பை தே.அ.அட்டை (இல. 731464138V), வி.அ.அட்டை (இல. 0902016307), விற்பனைச் சிட்டைகள், காசோலை, பணம் என்பவற்றுடன் 30.11.2002 அன்று மின்சாரநிலைய வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 222 3276. (11590)

'லிங்க வாசா', கே.கே.எஸ். வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), இணுவிலைச் சேர்ந்த க.கருணானந்தராஜா என்பவருடைய லைசென்ஸ், இன்சூரன்ஸ், Tax என்பன இணுவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இணுவில் பேப்பர் கடையில் (ஆஸ்பத்திரி முன்பாக) ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (11612)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இராயகோபால் சிவசங்கரநாதன்

மலர்வு 1928-10-27 உதிர்வு 2002-11-10

எம் சகோதரனின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோர், அஞ்சலிகளைச் செலுத்தியோர், தந்தி, தபால் மூலம் அனுதாபச் செய்திகளை அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் எம் உளம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (11.12.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*60, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (11617)

திருமதி நடராசா (தேவி)
*(சகோதரி)*

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சிறைச்சாலை)

சின்னக்கிணற்றடி ஒழுங்கை, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்) 08.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நமசிவாயம் - சின்னம்மா தம்பதிகளின் மகனும் சின்னத்துரையின் சகோதரரும் சின்னையா - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் சின்னமாவின் அன்புக் கணவரும் சிவராசா, ஜீவராணி, சுரேந்திரநாத், மங்களேஸ்வரி (U.K.), லிங்கநாதன், சுசீலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற நடராசா, சிவராசா, சதாநந்தன் போஸ், சுரேந்திரநாத் (U.K.), பொன்னுத்துரை, லிங்கநாதன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் (வாட்டர்), கனகசிங்கம் செல்லம்மா மற்றும் சிறிபத்மநாதன் (U.K.) ஆகியோரின் மைத்துனரும் நிஷாந்தன் (U.K.), நிரோஜ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஷாதனா (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்), வைஷ்யா, கனோஜ் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2002) புதன்கிழமை மாலை 5 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*163/1, கண்டி வீதி*
*(சின்னக்கிணற்றடி ஒழுங்கை),*
*அரியாலை.* (11610)

தகவல்:
மனைவி - சின்னம்மா.

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

(ஆயுர்வேத ஆஸ்துமா வைத்தியர் - ஏழாலை, நீர்கொழும்பு)

வேலணையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிற்றம்பலம் (ஆயுர்வேத ஆஸ்துமா வைத்தியர்) 09.12.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சோதிமலரின் அன்புக் கணவரும் ஹேமநளினி (ஆசிரியர், யாழ்.ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை), பிறேமநளினி (ஜேர்மன்), கௌரிபாலன் (பிரான்ஸ்), பாபநளினி (ஆயுர்வேத வைத்தியர்), ரஞ்சிதநளினி (ஆசிரியர், யாழ்.ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), அம்பிகைபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் கணேசமூர்த்தி, குகேந்திரன் (ஜேர்மன்), விஜயராணி (பிரான்ஸ்), ஸ்கந்தராஜா, சண்முகநாதன் (D.O. வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), விஜயலக்ஷ்மி (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும் சுகன்யா, கோமேதன், குகேஷ், கஜந்தி, நிலக்ஷன், கஜனி, கஜேந்தினி, ஆதிசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2002) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.* (11607) தகவல்: மனைவி.

## நூலகம் மீண்டும் பழைய இடத்தில்

தென்மராட்சி,டிசெ.11

மீசாலை, ஐயா கடையடியில் இயங்கிவந்த சாவகச்சேரி நகர சபை பொது நூலக மீசாலைக் கிளை நேற்றுமுன்தினம் தொடக்கம் மீசாலை பங்களா வீதியில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இக்கட்டடத்தில் நகர சபை அலுவலகம் தற்காலிகமாக இயங்கியதால் இந்த நூலகக் கிளை ஐயா கடையடிப் பகுதியில் முன்னர் இயங்கிவந்தது.

(ஐ-117)

# கண்ணீர் அஞ்சலியும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

வரணி, நாவற்காடு கிராம உத்தியோகத்தர் திரு.வேலாயுதர் நாகதேவன் அவர்களின் அன்புத் தந்தையார்

## கயிலாயர் வேலாயுதர்

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயரத்தில் பங்குகொள்வதுடன், இன்று அன்னாரின் 31ஆவது நினைவுநாளில் அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்கள்
*தென்மராட்சி.*

(11497)


மிகவும் சிக்கனமானதும், ஆகுசெலவு குறைந்ததுமான அனல் ஃபக்ஸ் இயந்திரங்கள்



brother
office network
இலிருந்து

தரத்தை விட்டுக் கொடுக்காமல், உங்கள் அலுவலகத்தின் தொழிற்பாட்டு ஆகுசெலவைச் சாத்தியமானளவு மிகவும் குறைவாக வைத்திருக்க விரும்பினால், அதைச் செய்வதற்கு உலகின் பிரசித்தமான brother வகையிலான அனல் ஃபக்ஸ்கள் உங்களுக்கு உதவியளிக்கும். அது பற்றிப் பரிசீலித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஃபக்ஸ் இயந்திரமும்
* 20 பக்க ஞாபகசக்தி
* பதிலளிக்கும் இயந்திரம்
* 50 மீ. கடதாசிச் சுருள்
ஆகியவற்றை இணைத்துள்ளது.

office network
ஒஃபிஸ் நெற்வேர்க் (பிறைவேற்) லிமிற்றெற்
இல. 12, மகலிவ் வீதி, கொழும்பு - 8. தொ.பேசி: 390490-2
அவசர தொலைபேசி இல.: 074 713349
ஃபக்ஸ்: 074 713349 ◆ ஈமெயில்: onl@sltnet.lk

வணிகர்கள்
கண்டி: 08 233593, 074 471402 • அநுராதபுரம்: 025-22073 • மாத்தறை: 041-21001-3 களுத்துறை (வடக்கு): 074-280719
• பொலன்னறுவை: 027-25626 • இரத்தினபுரி: 045-23779-80-81
பதுளை: 055-29505 • கம்பஹா: 033-27483 • குருநாகல்: 074-690501 • திருகோணமலை: 026-27256
யாழ்ப்பாணம்: 021-2222543

TRIAD 10131

metropolitan
மெற்றோபொலிட்டனிலிருந்து
சக்திமிக்க தீர்வுகள்





5,10,18 KVA மின் பிறப்பாக்கிகள் கையிருப்பில் கிடைக்கும்
(விருப்புரிமை: தொழிற்சாலையில் பொருத்தப்படும் சத்தமற்றதும் அதிக சத்தமற்றதுமான விதானங்கள்)
மெற்றோபொலிட்டனின் உத்தரவாதமும், ஈடு இணையற்ற விற்பனைக்குப் பிந்திய சேவையும்

அழையுங்கள்
மின் இயந்திரவியல் பிரிவு
தொலைபேசி: 074 700225

85, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 437797 ஃபக்ஸ்: 448980
ஈ-மெயில்: powersytems@metropolitan.lk



1-2000 KVA வரையிலான முழுமையான PRAMAC மின்பிறப்பாக்கிகளும் கிடைக்கும்

metropolitan
சிறந்ததினால் சக்தியூட்டப்பட்டது
PRAMAC GMI VENTURE RUUD

வணிகர்கள்
• கண்டி: 08 233593, 074 471402 • அநுராதபுரம்: 025-22073 • மாத்தறை: 041-21001-3
• களுத்துறை (வடக்கு): 074-280719 • பொலன்னறுவை: 027-25626 • இரத்தினபுரி: 045-23779-80-81
• பதுளை: 055-29505 • கம்பஹா: 033-27483
• குருநாகல்: 074-690501 • திருகோணமலை: 026-27256 • யாழ்ப்பாணம்: 021-2222543

சக்திக்கான தீர்வுகளை வழங்கும் நிறுவனம்

# மக்களின் வாழ்விடங்களிலிருந்து படையினர் வெளியேறவேண்டும்!

## சபையில் ரவிராஜ் எம்.பி. வலியுறுத்து

வடக்கிலிருந்து அரச படைகள் முழுமையாக வாபஸ்பெறவேண்டும் என்று நாம் கூறவில்லை. ஆனால், மக்கள் வாழும், அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் இடங்களிலிருந்து வெளியேறுமாறுதான் கேட்கிறோம் என்று தமிழ்த்தேசிய கூட்டணி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு, இயற்கை எல்லைகள் உள்ளன. ஆனால், வெளிநாட்டுச் சக்திகள் இனவாத எல்லைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இந்த நிலை இன்று இலங்கைக்கு; நாளைக்கு அதை இந்தியாவுக்குள்ளும் நுழைப்பதுதான் இந்த சக்திகளின் நோக்கம் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

'மூடிய அறைகளுக்குள் சமாதானப் பேச்சுக்களை நடத்திவிட்டுத் தற்போது அரசு சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றைப் பற்றிப் பேசுகிறது. பிரிந்த நாட்டை ஒன்று சேர்க்கவே இந்த ஆட்சி முறையை ஏற்படுத்தவேண்டும். ஆனால், இங்கு சேர்ந்த நாட்டைப் பிரிக்க முயற்சி செய்யப்படுகிறது' என்றார் அவர்.

'சமாதான பேச்சுக்களுக்கு வித்திட்டவர் ஜனாதிபதியே ஆவார். பேச்சுக்களை முன்கொண்டு செல்பவர்கள் துரோகிகள் என விமல் வீரவன்ஸ இங்கு கூறினார். அவ்வாறானால், ஜனாதிபதியும் இந்நாட்டின் துரோகிகளில் ஒருவரென அவர் கூறுகிறாரா எனக் கேள்வி எழுப்பினார் அமைச்சர் தி.மகேஸ்வரன்.

ஜனாதிபதியின் கணவரைக் கொன்ற கொலைகாரர்கள் ஜே.வி.பி. யினரே. இன்று நாட்டின் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கப் போகிறவர்கள்போலப் பேசுகின்றனர்; பாசாங்கு செய்கின்றனர்.




தமிழ்மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் இவர்கள் அல்லர். அதனைத் தமிழர்களே தீர்மானிப்பர். அகதிகளாக இன்னும் எங்கள் மக்கள் அல்லற்படுகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னரும் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை - இப்படி அவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாதபோதும் அதற்கு சமமான தன்மையுடைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளது. இது அவதானத்திற்குரிய விடயம். இவ்வாறான பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இந்தியாவில் 'பொடா' சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் தென்னாபிரிக்காவில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது. ஆனால், இலங்கையில் அது இல்லை. ஒரு நபரைக் கைது செய்யும்போது, அவர் பயங்கரவாதியா அல்லது குற்றவியல் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட வேண்டியவரா என்று தீர்மானிப்பவர் அப்போது கடமையில் இருக்கும் அதிகாரியே. இது அநியாயம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் உரிமைகள் பரவலாக மீறப்படுகின்றன. இது சர்வதேச சட்டத்திற்கும் புறம்பானது. - இப்படி அவர் கூறினார்.

கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பேற்பது என்ற கேள்வி, எமது மக்கள் மத்தியில் எழும்பியுள்ளது. அங்குள்ள பாதுகாப்புத் தடைகள் அகற்றப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் கோரி வருகின்றனர். இது எமது மக்களுக்கு ஏற்படும் ஓர் அச்சுறுத்தல் என்றே நாம் கருதுகின்றோம் வாழைச்சேனைச் சம்பவங்களால் எமது மக்களின் பாதுகாப்புக்கு ஏற்கனவே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கட்சிக்குள் பிளவு ஏற்படுவதற்குப் பதவியில் உள்ள அரசும் காரணமாகும். நாம் எவருடைய கைப்பொம்மைகளாகவும் செயற்படமாட்டோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை, முஸ்லிம் லீக் என்றோ, சோனக இஸ்லாமிய சங்கம் என்றோ அரசு நினைத்துவிடக் கூடாது. வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் தியாகத்தினால் - இரத்தத்தினால் உருவாக்கப்பட்ட கட்சியே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

சமஷ்டியைப் பற்றிபேசும் அரசு, எமது மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கவேண்டும்.

முஸ்லிம் லீக் போன்ற கட்சிகளைப் பிரித்து செயலாற்றுவதைப் போன்று எம்மையும் பிரித்தாளமுடியும் எனக் கருதி பிரதமர் செயற்படக்கூடாது. எமது மக்களின் உரிமை, பாதுகாப்பு என்பன எமக்கு முக்கியம் - இப்படி அவர் கூறினார்.

(ஒ)

## மதமாற்றத் தடைச்சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்

### அமைச்சர் மகேஸ்வரன் உறுதி

உள்நாட்டு யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையானவர்கள் அகதிகள் ஆகிவிட்டனர். இவர்களின் அவல நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அம்மக்களை மதம் மாற்ற சில சக்திகள் முயற்சிக்கின்றன. எனவே, அதனைத் தடுக்க மிக விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என்று இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவருடைய அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-

இந்து சமயம் மகத்தானது. அதைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கையெடுக்கப்படும். உலக இந்து மாநாடு மிகவிரைவில் கொழும்பில் நடத்தப்படும். அதில் இந்திய, மலேஷிய, ஐரோப்பிய நாடுகளின் இந்துப் பெரியார்கள் கலந்துகொள்வர்.

தென்னை அபிவிருத்திச் சபையோடு இணைந்த நிலையை மாற்றி பனை அபிவிருத்திச் சபை தனியாக இயங்க வைக்கப்படும்.

இந்த அமைச்சில் எந்தவித ஊழலும் இடம்பெறவில்லை. அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு அமைய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.

(ஒ)

## சமாதானம் எட்டப்பட்ட....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே வெளிநாடுகளில் சேவையாற்றுவதற்காக எமது இராணுவத்தினரை அனுப்பிவைக்கும் பொருட்டு விசேட பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. வெளிநாட்டில் சமாதான நடவடிக்கைகளில உதவுவதற்காக எமது இராணுவ வீரர்களை அனுப்புவது சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெனான்டோவுக்கும் இராணுவ உயர் அதிகாரிகளால் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும், இன்னும் நிரந்தர சமாதானம் எட்டப்படவில்லையாதலால எமது இராணுவ வீரர்களை முடிந்தவரையில் திறமைபெறச் செய்வதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி உறுதியளித்துள்ளார்.

நாடு பூராவும் இயல்பு நிலை ஏற படுத்தப்பட்ட பின்னர் இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக விமானப் படையினரால் பெருமளவிலான பங்களிப்பு வழங்கமுடியுமென விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா கூறினார்.

யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உள்நாட்டு விமான சேவைகளாவும் விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகவும், மாலைதீவுகள் போன்ற நாடுகளுக்கு உணவு வகை மற்றும் மென்பான வகைகளும் விமானப் படையினராலேயே விநியோகிக்கப்பட்டதாகவும், அதன் மூலம் நம்நாட்டுக்குப் பெருமளவிலான ஆதாயம் கிடைத்ததாகவும், மீண்டும் அவ்வாறான நடவடிக்கைகளை விமானப்படையினரால் ஆரம்பிக்க முடியுமெனவும் விமானப்படைத் தளபதி தெரிவித்தார்.

முப்படைகளும் எந்தவேளையிலும அரசின் அவசிய தேவைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவையாகும். இதனால் அரசு மேற்கொள்ளும் எத்தீர்மானங்களையும் படைகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும். விமானப்படையினரின் சேவை யுத்தத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதில்லை. அண்மையில் மாளிகாவத்தையில் இடம்பெற்ற உள்நாட்டுப் பிரச்சினையில் விமானப் படையினர் தலையிட்டு இருவார காலமாக அப்பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். எனவே, யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபின்னர் விமானப் படையின் பணிகள் சற்றுக் குறையுமாயினும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விமானப்படையிருக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளில் எவ்வித குறையும் ஏற்படமாட்டாதென்பது விமானப் படைத் தளபதியின் கருத்தாகும்.

யுத்தம் முடிவடைந்தபின்னர் இந்நாட்டுக்கு வருகைதரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்குமாதலால் உள்நாட்டு விமான சேவைகளைப் பயன்படுத்தி உல்லாசப் பிரயாணிகள் பயணங்களை மேற்கொண்டால் அரசுக்கு பெருமளவான வருமானத்தை விமானப் படையினரால் ஈட்டித்தர முடியுமென்பது விமானப் படைத் தளபதியின் மற்றுமோர் கருத்து வெளிப்பாடாகும்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் கடற்படையினருக்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகளில் எவ்வித குறைப்போ, தொய்வோ ஏற்படமாட்டாதென கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார். சமாதானம் எட்டப்பட்ட பின்னர் இலங்கைக் கடற்பரப்பில் எதுவித மாற்றமும் இடம்பெறப் போவதில்லை. போதைவஸ்துக் கடத்தற்காரர்கள், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், திருட்டுப் பொருள்களைக் கடத்துவோர் உட்பட சமூக விரோதிகள் கடல்கடந்து நாட்டுக்குள் பிரவேசிப்பதை தடுத்து நிறுத்துவது கடற்படையினரின் கடமையாகும் என அவர் விவரித்தார்.

கடலால் சூழப்பட்ட ஸ்ரீலங்காவின் கடற்பிராந்தியத்தின் பாதுகாப்பு கடற்படையினர் வசம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு விநாடியும் நாம் எமக்குரிய கடற் பிராந்தியத்தை நிர்வகிக்க வேண்டியுள்ளது. எனவே, யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட பின்னரும் கடற்படையினரின் பதவிகளுக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்பட இடமில்லையென்பது கடற்படைத் தளபதியின் கருத்தாகும்.

அவசியமேற்படுமிடத்தில் கடற்படைச் சிப்பாய்களை வெளிநாட்டு அமைதிகாக்கும் படைகளில் இணைத்துக் கொள்வதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டாலும், எமது கடற்பிராந்தியப் பாதுகாப்பில் எவ்வித தொய்வும் ஏற்பட இடமில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக பொ.ஐ. முன்னணி செயலாளர் தி.மு.ஜயரத்ன கருத்துத் தெரிவிக்கையில், பிரச்சினைக்குத் தீர்வு என்றவகையில் சிப்பாய்களின் திறமையின் அடிப்படையில் கைத்தொழில் உற்பத்தி, விவசாய முயற்சிகள், நவீன தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அரசின் முயற்சியினால் தொழில் வழங்கமுடியுமெனக் கூறியுள்ளார்.

ஆயினும், யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இராணுவத்தினரில் ஆட்குறைப்பு மேற்கொளவது ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பலவீனமாக்குவதாய் அமையுமென கொழும்பு பல்கலைக் கழக அரசியறுறை விரிவுரையாளர் தயான் ஜயதிலக கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட தயான் ஜயதிலக ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் காலத்தில் முதலாவது யுத்தமும், பின்னர் இந்திய அமைதிப்படைக்கு எதிராக புலிகள் சண்டையிட்ட இரண்டாவது யுத்தமும், ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் இடம்பெற்ற மூன்றாவது யுத்தமும், சந்திரிகா காலத்தில் நான்காவது யுத்தமும் என தொடர்ச்சியான யுத்தங்கள் இடம்பெற்றன. ஆதலால் யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது மட்டுமேயெனக் கொள்வதோடு, ஐந்தாவது யுத்தம் இடம்பெறமாட்டாதென எவ்விதம் நிச்சயப்படுத்த முடியுமெனக் கேள்வி எழுப்பினார்.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இப்பிரச்சினையை இலேசாக எடுத்துக்கொள்ள இயலாதெனச்சுட்டிக் காட்டினார்.

யுத்தப் பயிற்சிபெற்ற சிப்பாய்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படுத்தக்கூடிய உபாயங்களைக் கண்டறியவும் மற்றும் பலதரப்பட்ட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனச் சுட்டிக்காட்டிய கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இரண்டாவது உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஐரோப்பாவில் படைகள் புனரமைக்கப்பட்ட வகையில், இச்சமயத்தில் எமது படைகளிடையே புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளமுடியுமெனத் தெரிவித்தார்.

★

## இந்து மதத்தின் தத்துவங்களை சாதாரண மக்களுக்கு புகட்டுங்கள்

### வேலாயுதம் எம்.பி. தெரிவிப்பு

நாடு முழுவதுமுள்ள இந்து மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு 1978ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன, இந்து சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினை உருவாக்கினார். தற்போது இது ஒரு தேசிய அமைச்சா? வடக்கு - கிழக்கு மாகாணத்தை ஒட்டிய பிராந்திய அமைச்சா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றார் ஐக்கிய தேசிய முன்னணி எம்.பியான கே.வேலாயுதம்.

அன்னதானம் செய்வதும் முச்சக்கர வண்டிகளை வழங்குவதுமே அமைச்சின் பணிகளென்ற நிலையில் செயற்படக் கூடாது.

இந்துமதக் கோட்பாடுகளை கிராமிய மட்டத்திற்குக் கொண்டு செல்லுங்கள். இந்துமதத்தின் தத்துவங்களை சாதாரண மக்களுக்கும் புகட்டும் பணி மேற்கொள்ளப்படவேண்டும். - இப்படி அவர் கூறினார்.

(ஒ)

## ஆலயங்களைப் புனரமைப்பது வியாபாரம் அல்ல: அது கடமை

### சம்பந்தர் எம்.பி. வலியுறுத்தல்

வடக்கு - கிழக்குப் பகுதியின் இந்து ஆலயங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில திட்டமிட்டு அழிக்கப்பட்டன. ஏனையவை யுத்தம் காரணமாக அழிந்தன. சுயாட்சி ஏற்பட்டவுடன் அவற்றின் புனரமைப்பை அந்த ஆட்சி பார்த்துக் கொள்ளும். ஆனால், தற்போது புனரமைப்புக்கான பொறுப்பு அரசிடமே உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் சபையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஆலயங்களை புனரமைப்பது அரசின் பாரிய பொறுப்பு. இது ஒரு வியாபாரம் அல்ல; கடமை. எனவே, அதனை சரியாகச் செய்வதற்கு, சரியான திட்டங்கள் தேவைப்படுகின்றன.

கோயில் குருக்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அறிகிறோம். இது தேவையற்ற ஒரு செலவு. இதனால் கோயில்கள் முன்னேறப் போவதில்லை - இப்படி அவர் கூறினார். (ஒ)

## பாதுகாப்பு அமைச்சு நிதி வாக்கெடுப்பு விவாதம்

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு, எதிர்க்கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க சபாநாயகரினால் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிர்த்து 85 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசுடன் இணைந்து புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா மற்றும் மதனராஜன் முதலானோர் வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டு நிற்கும் இரு பிரிவினரும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது, நடுநிலைவகித்தனர்.

(ஒ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓய்வு பெற்ற கிராம அலுவலரும்
தமிழர் விடுதலைக் கூட்டணியின்
முக்கிய பிரமுகரும்,
வல்வெட்டி வன்னிச்சி அம்மன் ஆலய சபை
செயலாளரும் பருத்தித்துறை ஆதார
வைத்தியசாலை அபிவிருத்திச் சபை நியமன
உறுப்பினருமான

## M.P. கணேஸ்

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக 18.09.2002 முதல் நியமிக்கப்பட்டதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், நீண்ட ஆயுள் பெற்று சிறப்பான சமூகசேவை புரிய இறைவனை வேண்டுகிறோம்.

*பிரதேச செயலகம்,*
*கரவெட்டி.* (11625) - கிராம அலுவலர்கள் -



# வரவுசெலவுத் திட்டம் - 2003

**(255ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 1979ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 179 (3)ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 2003ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 11.12.2002ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
*09.12.2002.* (C/25341)

**பெனடிக்ற் தனபாலசிங்கம்**
**தலைவர்,**
**நகர சபை, சாவகச்சேரி.**



# எக்ஸ்போ ஏவியேஷன்

எமது விமான சேவையில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பை அடுத்து 09.12.2002 முதல் மேலதிகமாக விமான சேவைகளை ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## புதிய நேர அட்டவணை வருமாறு

காலையில் திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி. சனி ஆகிய தினங்களில்

| புறப்படும் நேரம் | | சென்றடையும் நேரம் | |
|---|---|---|---|
| இரத்மலானை | 08.00 மணி | யாழ்ப்பாணம் | 09.00 மணி |
| யாழ்ப்பாணம் | 10.00 மணி | இரத்மலானை | 11.00 மணி |

மாலையில் திங்கள், சனி, ஞாயிறு தினங்களில்

| புறப்படும் நேரம் | | சென்றடையும் நேரம் | |
|---|---|---|---|
| இரத்மலானை | 16.00 மணி | யாழ்ப்பாணம் | 17.00 மணி |
| யாழ்ப்பாணம் | 18.00 மணி | இரத்மலானை | 19.00 மணி |

(11630)




# அறிவித்தல்
## எக்ஸ்போ ஏவியேஷன்

எமது நிறுவனம் 13.12.2002 வெள்ளிக்கிழமை அன்று மாலை நேரமும் விசேட விமான சேவையை நடத்தவுள்ளதால் உங்கள் ஆசனப்பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி :- 021 222 3891
0777 730 555
0777 730 666

(11631)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
## 11.12.2002



ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்சுவாமி கோவில் அறங்காவலராகவும் ஓதுவாராகவும் இறைபணி ஆற்றி 23.11.2001 இல் இறைபாதமெய்திய பெரியவர்தான்

## அமரர் முத்தையா சதானந்தன்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்கள் ஆவார். அமரர் சதானந்தன் அவர்களை கல்வியல் நோக்கில், மொழியியல் நோக்கில், சமூகவியல் நோக்கில், இலக்கியவியல் நோக்கில், சீர்திருத்த நோக்கில், வெகுசனத் தொடர்பு பின்னணியில், சமயப்பணி என்ற நோக்கில், தத்துவ சித்தாந்த நோக்கில், அவர் ஆற்றிய ஆலயத் தொண்டுகள் என்ற நோக்கில் இவரின் அமரத்துவ நாள் எதிர்வரும் சமூகத்தினருக்கும் சந்ததியினருக்கும் சிறந்த தொன்மங்களையும் சீர்மியமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

*ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அறங்காவலர் சபை,*
(C/25339) துன்னாலை வடக்கு, புலோலி.

## முன்பள்ளி கலைவிழா

யாழ்ப்பாணம்.டிசெ.11

அல்வாய் பாரதிதாசன் முன்பள்ளியின் கலைவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாரதிதாசன் சி.க.கூ.சங்கத் தலைவர் நா.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வடமராட்சி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ வளர்ச்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலன் பிரதமவிருந்தினராகவும், கரவெட்டி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் கௌரவவிருந்தினராகவும், பருத்தித்துறை போரூட் நிறுவனத்தின் சிரேஷ்ட சமூக சேவை உத்தியோகத்தர் செல்வி கா.இராஜேஸ்வரி சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

## தென்னாபிரிக்க நீதிபதி பங்கேற்கும் கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.11

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரான நீதிபதி அல்பி சச்ஸ் (Albie Sachs) கலந்துகொள்ளும் இரண்டு கருத்தரங்குகள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

'மாற்றமடைந்துவரும் நீதி நிர்வாகம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை காலை 9.30 மணிக்கு யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள யாழ். பீச் இன் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

'போர்ச்சூழலுக்குப் பின்னர் மனித உரிமைகள்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு பிற்பகல் 3.45 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-10)

## மருத்துவ சேவை அனுமதிக்கான விண்ணப்பம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் மருத்துவம் தொடர்பான தொழில்களை மேற்கொள்வோர் 2003 ஆம் ஆண்டிற்கான மருத்துவ உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்களை இந்த மாதம் 15ஆம் திகதிமுதல் அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை தமிழீழ சுகாதார சேவைகள் மாவட்ட, பிரதேச இணைப்பாளர்களிடம் அல்லது மாவட்ட பணிமனைகளில் அல்லது கிளிநகர்ப் பகுதியில் அமைந்துள்ள நடுவப் பணியகத்தில் சமர்ப்பிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

ஆங்கில மருத்துவ சிகிச்சை நிலையம் சுதேச/ஹோமியோபதி/அக்குபஞ்சர் சிகிச்சை நிலையங்கள், சுதேச மருந்தகங்கள், ஆங்கில மருந்தகங்கள், சுதேச மருந்து உற்பத்தி நிலையங்கள், கண் சிகிச்சை நிலையங்கள், பற்சிகிச்சை நிலையங்கள், விசேட சிகிச்சை நிலையங்கள், மருத்துவ ஆய்வுகூடம், பல்கட்டும் இடம், கண்ணாடி வழங்கும் இடம், சுதேச/ஆங்கில நடமாடும் மருந்து விற்பனைகள் மற்றும் பிரத்தியேக சிகிச்சை மேற்கொள்ளும் அரச-மருத்துவமனை மருத்துவர்கள் மருத்துவ உரிமத்துக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

## மாட்டுக்கு உரிமைகோர அறிவிப்பு

பொம்மைவெளி அராலி வீதிப் பகுதி வயல் ஒன்றில் மேய்ந்ததாகக் கூறப்படும் மாடு ஒன்று பிடிக்கப்பட்டு அப்பகுதி கிராம சேவையாளரிடம் 10 நாள்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரையும் எவரும் அந்த மாட்டுக்கு உரிமைகோராததால் ஏலத்தில் விற்கப்பட உள்ளதாகவும் -

உரியவர் அதற்கு முன்னர் ஆதாரங்காட்டிப் பெறும்படியும் -

கிராமசேவையாளர் செ.தி.சகுந்தலாதேவி அறிவித்துள்ளார். (ஒ-9)

## அரியாலையில் பாலர் பாடசாலை

கடந்த 7வருடங்களாக இயங்காமல் இருந்த அரியாலை சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலை எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

இப்பாலர் பாடசாலை அமரர் குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் "அமரர் காசிப்பிள்ளை அன்னலட்சுமி ஞாபகார்த்த பாலர் பாடசாலை" என்ற புதிய பெயருடன் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர்
திருமதி செ.சுதாதேவி அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சிவஞானம் சத்தியதேவி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வலி.வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை, மல்லாகம்.**

(C/25340)

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா முத்துப்பிள்ளை

சுழிபுரத்தைச் சேர்ந்த நல்லையா முத்துப்பிள்ளை அவர்கள் நேற்று (10.12.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னையா மற்றும் நடராசா, சோமசுந்தரம், சோதிமுத்து, காலஞ்சென்ற இராசேஸ்வரி மற்றும் ஏகாம்பரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மைத்துனியும் சுசீலா, சிவரஞ்சினி, சிவகுமரன், ரவிச்சந்திரன், பத்மசிறி, காலஞ்சென்ற சாந்தினி பாலச்சந்திரன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2002) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுழிபுரம் வடக்கு, சுழிபுரம்.* ந.ஏகாம்பரமூர்த்தி (சகோதரன்). (11626)

## கருப்பசாமிதேவர் மாரிமுத்து

வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட கருப்பசாமிதேவர் மாரிமுத்து நேற்று (10.12.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் ஊஷானி, சரோஜினி, கஜதீபன், வேணுலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கருப்பசாமி, ராமசாமி, இராமலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.12.2002) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*7/4, துரைராசா வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (11624) மனைவி, பிள்ளைகள்.

## திருமதி பொன்னம்மா இராசையா

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இராசையா நேற்று (10.12.2002) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், குட்டித்தம்பி, நடராஜா, இராமநாதன் மற்றும் கண்மணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி (கனடா), மகேஸ்வரி (லண்டன்), பரமேஸ்வரி, தெய்வேந்திரம், திருச்செல்வம், மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் கந்தராசா (கனடா), பத்மநாதன் (லண்டன்), நடேசபிள்ளை, மல்லிகாதேவி, கமலாதேவி, உருத்திராதேவி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2002) புதன்கிழமை காலை 10மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*48, பிறவுண் றோட்,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*
(11628)

தகவல்:
ந.ரவீந்திரன்
(பேரன் - கிராமசேவையாளர் J/217).
தி.சத்தியபாலன்
(பேரன் - அதிபர், யா/புனித றோக்ஸ்).
இ.தெய்வேந்திரம், இ.திருச்செல்வம்
(மகன்மார்)

## முத்தையா ஜெகதீஸ்வரன்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், 19, மகளிர் கல்லூரி வீதி, கற்குளி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா ஜெகதீஸ்வரன் அவர்கள் நேற்று (10.12.2002) செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் திருமதி பாலராணி ஜெகதீஸ்வரன் (தாதிய உத்தியோகத்தர் - சாவகச்சேரி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி தனுஷியா முரளீதரன் (திறந்த பல்கலைக்கழகம் - கொழும்பு), திருமதி தீபாஷினி கலைச்செல்வன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளீதரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கலைச்செல்வன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மட்டக்களப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், மட்டுவில் ஓய்வு பெற்ற ஆசிரியர் பொன்னுத்துரை தம்பதிகளின் மருமகனும், 'கோகுலம்', சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த முருகேசு தாமோதரம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர் - மகளிர் கல்லூரி), திருமதி ஜெயராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் சம்மந்தியும் காலஞ்சென்ற ரவிச்சந்திரன், ஜெகதாம்பிகை (லிகிதர் - நீர்ப்பாசனத் திணைக்களம், மட்டக்களப்பு), காலஞ்சென்ற தேவமனோகரி (U.K), கமலாதேவி (பொது அரசினர் வைத்தியசாலை - மட்டக்களப்பு), ரமணீகரன் (RCDC மட்டக்களப்பு), ஸ்ரீதரன் (நீர்ப்பாசனத் திணைக்களம் - செங்கலடி), மங்களகரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி சுந்தரராணி சோமசுந்தரம், சுந்தரராஜன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), காலஞ்சென்ற புஸ்பராணி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2002) வியாழக்கிழமை காலை 10மணியளவில் அன்னாரது மருமகனின் இல்லமான 'கோகுலம்', சங்கத்தானை, சாவகச்சேரியில் இடம்பெற்றுப் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*'கோகுலம்'*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

திருமதி பாலராணி ஜெகதீஸ்வரன்
(மனைவி),
தா.முரளீதரன் (மருமகன்) (11632)

### நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம்

# அதிகாரிகள் கலரியில் அமர்ந்திருந்த 'அந்நியர்களால்' எழுந்த பிரச்சினை

ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இருபது நிமிடங்கள் வரை பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது உரையாற்றினார்.

அவர் உரையாற்றி ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் சபையில் ஒழுங்குப் பிரச்சனையொன்றையும் அவரே எழுப்பினார்.

அப்பொழுது பிற்பகல் இரண்டரை மணி. சபை நடவடிக்கைகளுக்கு சரத் சந்திரராஜ கருணா தலைமை வகித்துக்கொண்டிருந்தார். விமல் வீரவன்ஸ அவரைப் பார்த்து, 'நான் இங்கு உரையாற்றுகையில் அமைச்சுக்களின் அதிகாரிகள் அமர்ந்திருக்கும் கலரியில் வெளிநாட்டவர் இருவர் அமர்ந்திருந்தனர். எனது உரையின் பின்னர் அவர்கள் எழுந்து வெளியே சென்றுவிட்டனர்.

'இவர்கள் யார்? அவர்களை அதிகாரிகள் கலரியில் அமர்வதற்கு எவர் அனுமதித்தனர்? எனக் கேள்வி எழுப்பினார்.

அதனை ஆதரித்து ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் 'யார் அவர்கள்? சபைத்தலைவர் பதில்தரவேண்டும்' என்றார்.

அதுபற்றிப் பின்னர் விசாரணை செய்து கூறுகிறேன் என்றார் சபைத் தலைவர்.

இதுவொரு பாரதூரமான விடயம். இதனைத் தட்டிக் கழித்துவிடமுடியாது. பாதுகாப்பு அமைச்சர் சபையில் இருக்கிறார். அவர் அதற்கான பதிலைத் தரட்டும் எனக் கூறினார் அனுரா பண்டாரநாயக்க. 'யார் அவர்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் அதனைக் கவனிக்கவில்லை' என்று பதிலளித்தார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

'நீங்கள் தான் பாதுகாப்புக்குரிய பொறுப்பான அமைச்சர். பதில் கூறாமல் தட்டிக்கழிக்க முனையவேண்டாம்' என வலியுறுத்தினார் அனுரா பண்டாரநாயக்க.

இந்த வேளையில் குறுக்கிட்ட அமைச்சர் அஸ்வர், அனுரா பண்டாரநாயக்காவை நோக்கி, நீங்களும் சபாநாயகராகக் கடைமை புரிந்தவரே. சபாநாயகரே இந்தச் சபைக்குப் பொறுப்புடையவர். அவரிடம் இந்தக் கேள்வியை எழுப்புங்கள் என்றார்.

வெளிநாட்டவர்கள், சபாநாயகர் கலரியிலும் பொதுமக்கள் கலரியிலும் வந்தமரலாம். அரச அதிகாரிகளின் கலரியில் அமரமுடியாது என மறுபடியும் வலியுறுத்தினார் அனுரா பண்டாரநாயக்க.

இது நாடாளுமன்றத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். இதற்குள் அமர்வதற்கு யார் அவர்களை அனுமதித்தது? ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எரிந்து கொண்டிருந்த நெருப்பில் மீண்டும் எண்ணெய் ஊற்றினார்.

சபாநாயகரிடம் இது பற்றிக்கேட்டு பத்து நிமிடத்துக்குள் சபைக்கு அறியத் தருவேன் என சபைத் தலைவர் சரத் சந்திரராஜகருணா கூறினார்.

ஜே.வி.பி. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் இதனை ஏற்கவில்லை. சபையில் கூச்சலிட்டனர். மேசைகளில் உள்ள புத்தகங்களைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

அமைச்சுகளின் அதிகாரிகள் அமரும் கலரியில் வருகை தந்திருந்தவர்களின் பெயர்களை உடனே கூறுங்கள் எனக் கூச்சலிட்டனர். சபையில் குழப்பநிலை பதினைந்து நிமிடம்வரை இவ்வாறு நீடிக்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன எழுந்து விளக்கமளிக்க முனைந்ததும் சபையில் அமைதி நிலவியது.

அரசு பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர்கள் குழுவொன்றை அமைத்துள்ளது. அதில் வெளிநாட்டவர்களான கேணல் பிலிப் வில்கில்சன், கலாநிதி கிறிஸ்மித் ஆகியோரும் இருக்கிறார்கள். சபாநாயகரின் அனுமதி பெற்றதன் பின்னரே அவர்கள் அரச அதிகாரிகள் கலரியில் அமர்ந்து சபை நடவடிக்கைகையக் கவனித்தனர் எனக் கூறினார்.

அதன் பின்னரும் விமல் வீரவன்ஸ எழுந்து விளக்கம் கோரமுனைகையில், ஒழுங்குப் பிரச்சினைக்குப் பதிலளிக்கப்பட்டுவிட்டது. ஆசனத்தில் அமருங்களேன்! என சபைத் தலைவர் கூறினார். சபை வழமை நிலைக்குத் திரும்பியது. (ஓ)


உ
சிவமயம்

## வட இந்திய காசி பத்ரிநாத், கேதார்நாத்,அமர்நாத் யாத்திரை

பூரி, புவனேஸ்வரர், கோனராக், காசி, சாரணாத், கயா, புத்தகயா, கல்கத்தா, ஜெய்பூர், அலகாபாத் (திரிவேனிசங்கமம் கங்கா, ஜமுனா, சரஸ்வதி) அயோத்தி, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஸ், பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, டெல்லி, ஆக்ரா (தாஜ் மஹால்), அமர்நாத், வைஸ்ணவிதேவி, சென்னை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், சுசீந்திரம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, சிதம்பரம், சென்னை, 35 நாள்கள். ஆண்கள், 75 வயதுக்குள், பெண்கள், 45 வயதிற்கு மேல் 70 வயதுக்குள் ஆரோக்கியமானவர்கள் மட்டும் விருப்பமுடையவர்கள். 31.03.2003இற்கு பிந்தாமல் தங்கள் பாஸ்போட் பிரதி 2, அடையாள அட்டை பிரதி 2 அத்துடன் ரூபா 1000/- முற்பணம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளவும்.

இந்த யாத்திரைகள் 2000ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் நினைவாக சேவை நலங்கொண்டு குறைந்த செலவில் நடத்தும் யாத்திரை.

மேல் விவரங்களுக்கு: T.ஸ்ரீரெங்கநாதன்.
தொ.இல.: 0777-680102
(25 பேர் மட்டுமே)
(சி-25332)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி
### 11~12~2002

அன்னை மடியில் 30 - 04 - 1932



ஆண்டவன் அடியில் 11 - 11 - 2002

### திருமதி கந்தையா திரேசா நாகம்மா

அன்பால் பண்பால் எமையணைத்து
பாசம் எனும் தேன் கலந்து
மனதினிலே மறவாத இடம் பிடித்த
நேசம் மிக்கவரே!
மறவாத நினைவொன்று
மனதினிலே நாம் வரைந்து
தவறாமல் உங்களையே
நித்தம் எண்ணுகின்றோம்.

இவரின் ஆத்மசாந்திக்காக இன்று (11.12.2002) புதன்கிழமை காலை (மு.நே) 6.30 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றுமாறும் அன்று இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*105, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (11619)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிமார்.

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம்

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் வெற்றிடமாக உள்ள ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அந்தந்த கல்வி வலய பணிப்பாளர்களால் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I அல்லது 2-I ஐச் சேர்ந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளில் சேர்ப்பிக்குமாறும் -

இது தொடர்பான மேலதிக விவரங்களை வலயக் கல்விப் பணிமனைகளில் பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)


## ஆங்கில வகுப்புகள்

தரம் 1முதல் தரம் 13 வரையான பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாடத்திட்டத்திற்கு அமையவும் வளர்ந்தோருக்கான ஆங்கில பேச்சுப் பயிற்சி வகுப்பும் ஆரம்பமாகியுள்ளன.

ஆசிரியர்: M.P.ஷெண்,
சுஷாந்தீஸ்
ஆங்கில கல்வி நிலையம்,
டச்சு வீதி, சாவகச்சேரி.
(சி-25335)


## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
### மீளக் கேள்வி கோருதல்

1. வல்வெட்டித்துறை - மீன் சந்தை
2. தொண்டமானாறு - துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்
3. வல்வெட்டித்துறை - மரக்கறிச் சந்தை

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் அறிந்துகொள்ளவும்.

*நகராட்சிமன்ற அலுவலகம்,*
*வல்வெட்டித்துறை.*
2002.11.29

தலைவருக்காக,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.
(சி-25337)


## லயன் ஏயர் விமான டிக்கெட்டுகள்
### இலவசம்! இலவசம்! இலவசம்!

யாழ்ப்பாணத்தில் உங்கள் விமானப் பயணத்திற்கு நாடவேண்டிய இடம் பிள்ளையார் விலாஸ், பிள்ளையார் விடுதி (INN) எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு லயன் ஏயர் விமானச் சீட்டுக்களை எங்களிடம் வாங்கும் எமது வாடிக்கையாளர்கள் இலங்கை யானை மார்க் கொம்பனியில் செய்யப்பட்ட ஐஸ்கிறீமை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆகையால், இன்றே உங்கள் லயன் ஏயர் விமானப் பயணச் சீட்டுக்களை வாங்கி உங்கள் அபிமான கனிஸ்ரர் ஐஸ்கிறீமை (FAMILY Pack) இலவசமாக சுவைத்து மகிழுங்கள்.

### பிள்ளையார் விலாஸ்

31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 222-2829
(11621)


## கணக்காளர்/நிர்வாக உத்தியோகத்தர் பதவி ஒப்பந்த அடிப்படையில்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முன்னனுபவமும் பொதுச் சேவையில் ஆர்வமுங்கொண்ட தகுதியானவர்கள் 2002.12.20ஆம் திகதி மாலை 4.00 மணிக்குமுன் பதிவுத்தபால்மூலம் விண்ணப்பிக்கவும். தகுதி அனுபவத்திற்கேற்ப சம்பளம் பேசித்தீர்த்துக் கொள்ளப்படும்.

*73, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(சி-25323)
- கௌரவ தலைவர்.

## மரண அறிவித்தல்

### ஞானமுத்து ஜோர்ஜ் (கற்கோவளம்)

*(இளைப்பாறிய தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்)*

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கற்கோவளத்தை வசிப்பிடமாகவும் தற்போது இல.30, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளியில் வசித்தவருமாகிய ஞானமுத்து ஜோர்ஜ் அவர்கள்(09.12.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மேரி றோசலின் ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும் செபஸ் மகேந்திரகுமார் (பொறியியலாளர்), ரவீந்திரகுமார், சுவேந்திரகுமார்(கனடா), சாந்தகுமாரி அற்புதகுமார்(ஆங்கில சுருக்கெழுத்தாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அற்புதகுமார்(மதுவரி சார்ஜன், சங்கானை), வசந்தி, கௌரி, விஜி ஆகியோரின் அருமை மாமனாரும் மேசி அருளினி, குளோறியா(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), றெஜி அருள்றாஜ்(சென்.ஜோன்ஸ் கல்லூரி), பைரவி, மகிழன், ஆரபி, நிரோசன், றொசானி, ஜெரோம், யோடன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை(12.12.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்துக்கு திருப்பலிப் பூசைக்காக எடுத்துச்செல்லப்பட்டு, கத்தோலிக்க மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.30, சுவாட்ஸ் லேன்,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
பொ.அற்புதகுமார் (மருமகன்)
(1622)





யாழ் நகரில் சம்பாதித்த எமது நிரந்தரச் சொத்துக்களான நம்பிக்கை, நாணயம், துரிதசேவை, அனுபவம், என்பவற்றோடு தென்மராட்சி மக்களின் சேவைக்காய் சாவகச்சேரி இந்துவின் அருகில்

14-12-2002, சனிக்கிழமையிலிருந்து அனைத்துக் கணனிசார் சேவைகளும்

# அன்புத்தாயின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மண்ணமர்வு
05 - 09 - 1918



விண்ணுயர்வு
15 - 11 - 2002

# திருமதி கந்தையா தங்கம்மா

உமது ஊனுருக்கி உயிருருக்கி
நாமுயர உயர்ந்தீர் தாயே!
அறம் ஊட்டி அன்பு காட்டி - வாழ்வில்
திறன் தீட்டி திடமோடு வாழ
வழி தந்தீர் தாயே!
வானொன்றை அளந்து கொடுத்தாலும்
தாயே!
உன் கைபட்ட சோற்றுக் கவளத்துக்குக் காணுமோ?
யுகங்களாய் பிறந்து பிறந்து
உனக்குத் தாயாக உழைத்தபோதும்
உன் கடன் தீர்க்கப்போதுமோ?
உன்னை நினைக்கையில் தாயே! உள்ளமே உருகி
உடம்பும் வலிக்குதம்மா!
அன்னையின் அன்புக்கும் அரவணைப்புக்கும்
ஆதரவுக்கும் நாம் இனி என் செய்வோம்.

**க.விக்கினேஸ்வரன்**
**(ராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்,**
**நவீன சந்தை, யாழ்ப்பாணம்).**

***விளையாட்டரங்க வீதி,***
***கல்வியங்காடு.***

இல. 1A, ஆட்டுப்பட்டித்தெரு ஒழுங்கை,
கொழும்பு - 13.

(C/25342)

# அதாவுல்லா அணி அமைச்சர்களை நீக்குவதில்லை என பிரதமர் உறுதி

## ஹக்கீமுக்கு எதிரான அடுத்த நடவடிக்கைக்கு உயர் நீதிமன்றம் செல்ல அணியினர் ஆயத்தம்

கொழும்பு,டிசெ.11

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் போட்டிப் பிரச்சினை நாளுக்கு நாள் முற்றி வருகிறது. போட்டிக் கூட்டங்கள், பதவி விலக்கல்கள், புதிய நியமனங்கள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. அதாவுல்லா அணியினர் நேற்றுமுன்தினம் பிரச்சினையை பிரதமர் ரணிலிடம் எடுத்துச் சென்றனர். தங்கள் அணியைச் சேர்ந்த எந்த அமைச்சரையும் பதவிவிலக்குவதில்லை என்று பிரதமர் தமக்கு உறுதி அளித்திருக்கிறார் என அந்த அணியினர் உதயனுக்குத் தெரிவித்தனர்.

தங்கள் அணி அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் என்று அணியினர் பிரதமருக்குத் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தாம் எல்லோரும் பிரேரணையை ஆதரித்து அரசோடு சேர்ந்து வாக்களித்ததைப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

ரவூப் ஹக்கீமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து தாம நீக்கிவிட்டதால் அவரின் அமைச்சர் பதவியையும் நீக்குமாறு கடந்த 2 ஆம் திகதி தாம் பிரதமரிடம் கொடுத்த கடிதப்படி இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அணியினர் பிரதமருக்குச் சுட்டிக்காட்டினர். உடனே நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொண்டனர். பிரதமர் அதற்குப் பதில் அளிக்காமல் மௌனம் சாதித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கக்கோரி பிரதமரிடம் கடிதம் கொடுத்ததுபோல் ஜனாதிபதியிடமும் கையளித்திருந்தனர். அவரும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஹக்கீமுக்கு எதிரான அடுத்த நடவடிக்கைக்கு அதாவுல்லா அணியினர் உயர் நீதிமன்றம் செல்வதற்கு ஆயத்தம் செய்து வருகின்றனர். இதைப் பிரதமரிடம் அந்த அணியினா தெரிவித்துள்ளனர்.

பிரதமருக்கும் அதாவுல்லா அணியினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில நிகழ்ந்தது. 10-15 நிமிடங்கள் பேச்சுகள் நடந்தன. (ஐ)

## காத்தான்குடியில் வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி பொதுச்சந்தை வர்த்தகர்கள் நேற்றுக் காலை பெரும ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். பொதுச்சந்தை சுற்றாடலில் மாட்டுக் கழிவுகள் மற்றும் சந்தையில் தினமும் குவியும் குப்பைகளையும் கழிவுகளையும் அப்புறப்படுத்தாமை, குடிதண்ணீர் வசதியின்மை, மின்சாரமின்மை போன்றவற்றைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சுமார் நூறு வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள இச்சந்தை ஜாமியுழ் ழாபிரின் பெரிய ஜும்ஆ பள்ளி வாசல் நிர்வாகத்திலேயே இருந்து வருகிறது. (ஐ)

## மெலிஞ்சிமுனையில் மீண்டும் வாந்திபேதி!

ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனைப் பகுதியில் மீண்டும் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளது. வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டதாகக் கூறி அப்பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## ஹக்கீம் அணியின் செயலாளராக ஹஸன் அலி தெரிவுசெய்யப்பட்டார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் பதவிக்கு எம்ரீ.ஹஸன் அலியை நியமிப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அந்த அணியின் அரசியல் பீடம் நேற்றுமுன்தினம் இரவு கூடி இப்பதவிக்கு எம்ரீ.ஹஸன் அலியை நியமிப்பதற்கான தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

கடந்த ஞாயிறு இரவு நடைபெற்ற அதியுயர் பீடக் கூட்டத்தில் இப்பதவிக்கு பஷீர் சேகுதாவூத் தெரிவு செயயப்பட்டதும், ஆனால் பின்னர் ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக அடுத்த பன்னிரெண்டு மணித்தியாலங்களில் அவர் அப்பதவியை விட்டு விலகியதும் தெரிந்தவையே.

தற்போது அப்பதவிக்கே ஹஸன அலி தெரிவாகியிருக்கின்றார்.

இது தொடர்பாக கட்சி வெளியிடடுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது பிரிந்துநின்று செயற்பட்டுவரும் உயர்பீட உறுப்பினர்களின் நடவடிக்கைகளை அரசியல் உயர் பீடம் வன்மையாக கண்டிக்கிறது. அவர்களுள் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஐந்து பேரையும் தவிர்ந்த ஏனையோர் ஒருவார காலத்துக்குள் திரும்பி வந்து சேரவேண்டும் என உயர் பீடம் தீர்மானிக்கிறது.

யாப்பு மீதான எந்த வித சீர் திருத்தமும் அடுத்த பேராளர் மாநாடு வரை மேற்கொள்ளப்படமாட்டாது. அதேவேளை, கட்சியின் செயலாளர் நாயகம் பதவியை வகிப்பவர் நாடாளுமன்றப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் செயலாளர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும். நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளில் அங்கத்துவம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகள் கட்சியின் உயர் பீடங்களில் உத்தியோகப்பற்றற்ற உறுப்புரிமையை வகிக்க வேணடும் என அடுத்த யாப்பு திருத்தத்துக்கான முன்மொழிவு ஒன்றும் இக்கூட்டத்தின் போது பரிந்துரைக்கப்பட்டது.

அதேவேளை, 12 வருடகாலமாக கட்சியின் பொருளாளராகப் பணியாற்றிய எம்.ரீ.ஹஸன் அலி தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னர் சபையின் ஒவ்வொருவரும் அவரே பதவிக்கு பொருத்தமானவர் என கருத்துத் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் உயர்பீடத்துக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது கட்சி யாப்பு விதிமுறைகளுக்கமைய அரசியல் பீடத்தின் சிபார்சுகளுக்கு அமைவாகவே - அவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

- இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரிந்து நின்று செயற்பட்டுவரும் குழுவினர் ரவூப் ஹக்கீம் மீது சுமத்தியுள்ள 36குற்றச்சாட்டுகளும் வேண்டுமென்றே சோடிக்கப்பட்டவை. அவற்றில் உண்மை இல்லை என்று முஸ்லிம் காங்கிரஸின் மூத்த துணைத் தலைவர் ஏ.சி.அப்துல் மஜீத் கூட்டத்தில் அறிவித்து பலத்த கண்டனம் தெரிவித்தார். அது கண்டனத் தீர்மானமாக ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பேராளர் மாநாடு, செயற்குழு, அரசியல் பீடம், அதியுயர்பீடம் என்ற அதிகார அமைப்புகள் இப்போது முஸ்லிம் காங்கிரஸில் இருக்கின்றன. இவையெல்லாவற்றிற்கும் மேலாக இறுதி முடிவுகளை எடுப்பதற்கு Supreme Council என்று அதாவது உச்ச மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அதில் கட்சித் தலைவர் ஓர் உறுப்பினராக இருக்கலாம். இதற்கு ரவூப் ஹக்கீம் இணங்கினால் பிரிந்து நிற்பவர்கள் மீண்டும் ஒன்று சேர்வது சாத்தியமாகும் என்று நூர்தீன் மசூர் ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார். அதை நேற்றைய கூட்டம் நிராகரித்து விட்டது.

High Command அதாவது அதி உயர் பீடம் இருக்கும் போது அதற்கு மேல் எதற்கு ஓர் உச்ச மன்றம் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

தவிரவும் அப்படியான ஒரு மன்றை அமைப்பதற்கு கட்சியின் யாப்பைத் திருத்தவேண்டும். (ஐ)


### விக்னா கல்வி நிறுவனம்

52-ஸ்ரான்லி வீதி. யாழ்.

O/L சனி,ஞாயிறு வகுப்பு ஆரம்பமாகிவிட்டன.

*வடக்கிலே அனுபவம் நிறைந்த பிரபல ஆசிரியர் குழாமினால்*

☆வடமராட்சி, தென்மராட்சி, தீவுப் பகுதி மாணவர்களுக்கான விசேட பிரிவு.

☆இம்முறை பிரிவு 3மட்டுமே.

☆அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**சனி,ஞாயிறு வகுப்பிற்கான நேர அட்டவணை கீழ் வருமாறு**

| | |
|---|---|
| கணிதம் - 8.30 | விஞ்ஞானம் - 9.30 |
| ஆங்கிலம் -10.30 | தமிழ் -11.30 |
| சமூகக்கல்வி-12.30 | சமயம் - 1.30 |
| வர்த்தகம் - 2.30 | |

பிரிவு - 2

*O/L EVENING CLASS*

தரம் 6,7,8,9,10

ஆரம்பம்-12-12-2002(காலை 9மணி)

### வீடியோ நாடாக்கள் விற்பனை

(தற்சமயம் பாவனையில் உள்ளது)

**100/=**

*நைற் வீடியோ*

உரும்பிராய். (11616) (C-25345)

### நிறைஞ்சனாஸ்

சாங்கானை

06.12.2002 முதல்

விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த

**"நேருக்கு நேர்"**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பி.நே) (C-25281)

### லக்சுமி இணுவில்.

தாக்குதலும் கராட்டியும் நிறைந்த

**UNIVERSAL SOLDIER**

(ரீலஸ்)

காட்சிகள் : 10.30, 2.30, 6.30 (பி.நே)

14.12.2002 முதல்

உன்னை நினைத்து (11566)

### நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்

ஷாலினி, கனகா, விவேக் நடித்த

**செந்தூர தேவி**

(ரீலஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேடகாட்சிகள் வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பி.நே.) (11537)

### ராஜா யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும்

அஜித் (இருவேடங்களில்),கிரன், மீனா



*வில்லன்*

(ரீலஸ்) கா.நே.: 10.00, 3.00

JEAN CAAUDE VANDAMME யின

**BLACK EAGLE**

கா.நே. 7.30, 9.30 (பி.நே) (C-25184)


வலி. வடக்கு பிரதேச செயலகத்தில்

## புற்று நோய் சிகிச்சைக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம்

### அ. அட்டைகளுடன் வரும்படி அறிவுறுத்தல்

வலி.வடக்கு,டிசெ.11

தெல்லிப்பழையில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள புற்று நோய் சிக்சசை நிலையத்தில் எதிர்வரும் 17ஆம் , 18ஆம் திகதிகளில் சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வரும் வைத்திய நிபுணர்கள் இச்சிகிச்சைகளை வழங்கவுள்ளனர்.

புற்று நோய் சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சை பெறச் செல்பவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் மேற்கொண்டுள்ளார்.

சிகிச்சை பெறச் செல்பவர்களை வலி.வடக்கு பிரதேச செயலகத்துக்கு நோயாளரின் அடையாள அட்டை மற்றும் உதவியாளரின் அடையாள அட்டை என்பவற்றையும் கொண்டுவந்து பதிவு செய்து கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் கடமையாற்ற கொழும்பில் இருந்து மாதத்தில் இரு தடவைகள் புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் விஜயம்செய்து நோயாளர்களை பார்வையிடவுள்ளனர்.

இரு வாரங்களுக்கு ஒரு தடவை புற்று நோய் சிகிச்சை நிலையத்திற்கு விஜயம் செய்யும் இந்த நிபுணர்கள் இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக நின்று பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வருகை தரும் வைத்திய நிபுணர்கள் கடுமையான நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் ஆரம்ப அறிகுறிகள் உள்ள நோயாளர்களை இனங்காணவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கதிர் தொழிற்பாட்டு இயந்திரம் (RADIATION TREATMENT PLANT) தெல்லிப்பழை வைத்திய சாலையில் உள்ளது. ஆயினும் அவ்வியந்திரத்தில் உள்ள முக்கிய பாகம் ஒன்று கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உபகரணம் இன்மையால் றேடியம் கதிர்வீச்சு சிகிச்சைகளை நோயாளர்களுக்கு அளிக்க முடியாத நிலைமை உள்ளதாகத் தெரிய வருகிறது. (ஓ-86)


### ஒருநாள் கோழிக்குஞ்சு விநியோகம்

**பிராந்திய கோழிப்பண்ணை - அச்சுவேலி**

மேற்படி பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் ஒருநாள் கோழிக் குஞ்சுகள் 11.12.2002 இன்றும், நாளையும் (12.12.2002) பண்ணையில் வைத்து விநியோகஞ்செய்யப்படும். தொடர்ந்து ஆறு (06) நாள்களுக்கு ஒரு தடவை குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படவிருப்பதால் பெறவிரும்புபவர் இப்பண்ணையில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

| | |
|---|---|
| பேடு | - ரூ. 34.00 |
| புறோயிலர் | - ரூ. 32.00 |
| சேவல் | - ரூ. 02.00 |

(C-25343)


## துயர் பகிர்கின்றோம்



எமது நிலைய ஆரம்ப உறுப்பினர்

**திரு.சு.முரளிதரன்**

அவர்களின் அன்பு அன்னை

**திருமதி**

**சிவகாமி சுப்பிரமணியம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும்.

(C-25346)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் பாலசுந்தரமூர்த்தி

### (துரை மாஸ்ரர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலசுந்தரமூர்த்தி நேற்று (10.12.2002) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மாஸ்ரர் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அருமை மருமகனும், பத்மாவதியின் அருமைக் கணவரும், தாரணி, சாமினி, தீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் சந்தநாயகி (விரிவுரையாளர் - இசைத்துறை, மருதனார்மடம்), சௌந்தரநாயகி, ரங்கநாயகி, கமலநாயகி (ஆசிரியை, யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருமதி பாசக்கி புண்ணியமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற பகவதி பாக்கியநேசர் மற்றும் பரமேஸ்வரி (கனடா), பரிமளம், பரமகுருநாதன் (கனடா), காலஞ்சென்ற ஜெகதீசன், தங்கமுத்து, இராசேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2002) புதன்கிழமை 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*84/1, தபாற் கந்தோர் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (11633)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## பொன்னம்பலம் சிவப்பிரகாசம்

### (சின்னஅண்ணை)

*(முன்னாள் கொக்குவில் புகையிரதநிலைய லிகிதர்)*

உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவப்பிரகாசம் நேற்று(10.12.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான பொன்னம்பலம் - முத்துப்பிள்ளையின் மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, ஞானம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், சி.சகுந்தலாதேவியின் மாமனாரும், சிதம்பரநாதன் (பெறாமகன்), மயூரன், நிருஜா, நிஷாந்தி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.12.2002) செவ்வாய்க்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு.* (11634)

தகவல்:-
இ.சிதம்பரநாதன்
(மலேரியா தடுப்பு பரிசோதகர் - தர்மபுரம்)

# சுவிஸில் புலிகளின் பிரதிநிதிகள்



சுவிஸ் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அந்நாட்டு அரசு அதிகாரிகளுடன் விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம், உருத்திரகுமார், சுவிஸ் நாட்டின் அரசியல் பிரதிநிதி அன்டன் பொன்ராஜா ஆகியோர் சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் அரசியல் பிரிவின் தலைவர் பீற்றர் மோரர், வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளான ரொடல்பே இம்கொவ், மார்குஸ் ஹனிகர், சுவிஸ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி வெலினா பொனால்ட் ஆகியோருடனும், முரண்பாட்டு கற்கைகளுக்கான நிறுவனம் ஒன்றின் தலைவரான பேராசிரியர் நோபேட் ரொபேர்ஸ் ஆகியோருடன் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு இது.

# ஆர்ப்பாட்டம் நடத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கான பொதுமக்கள் மஹாத்மா தியேட்டர், நெல்லியடி பொதுச் சந்தைக்கு அண்மையில் வீதியின் இரு பக்கங் களிலும் முற்பகல் 11மணிக்குப் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில், கலகம் அடக்கும் பொலீஸார் பிரதான வீதி வழியாக அங்கு வந்தபோது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் கலகம் அடக்கும் பொலீஸாரை செல்ல விடாது தடுத்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலீஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே முறுகல்நிலை முற்றியதைத் தொடர்ந்து பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அங்குமிங்குமாக சிதறி ஓடினார்கள். கடைகள் யாவும் மூடப்பட்டன. இந்நிலையில் கண்ணீர்ப் புகை, துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த பொலீஸார், மஹாத்மா தியேட்டர் சந்தியில் இருந்து நெல்லியடி பஸ் நிலையச் சந்திவரை வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை, கடைகளில் வேலை செய்தோரும் துப்பாக்கியால் கடைகளில் வைத்தே சுடப்பட்டு காயங்களுக்குள்ளானார்கள்.

இச்சம்பவத்தின்போது செய்தி சேகரிக்கச்சென்ற ஐ.பி.சி. செய்தியாளரும் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தினால் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதிப் போக்குவரத்து நெல்லியடி நகரில் ஸ்தம்பிதமடைந்தது. மாலுசந்தி, உடுப்பிட்டி வீதி ஊடாக வாகனங்கள் பயணத்தை மேற்கொண்டன. சம்பவம் நடைபெற்ற இடத்தில் சேதமடைந்த நிலையில் சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும் கிடந்தன. சம்பவத்தின் பின்னர் சிலரைப் பொலீஸார் கைது செய்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் மனித உரிமை ஆணைக் குழு அதிகாரியும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். தொடர்ந்தும் கடைகள் யாவும் மூடப்பட்ட நிலையில் மாலை வரை நெல்லியடி பதற்றநிலையில் காணப்பட்டது. நெல்லியடி ஊடான போக்குவரத்து பிற்பகல் 3மணிக்குப் பின்னர் அனுமதிக்கப்பட்டது.

### கிரனேட் வீச்சு

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர்மீது கலகம் அடக்கும் பொலீஸாருடன் சிவில் உடையில் காணப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் சேர்ந்து தாக் குதல் நடத்தினர் என்று காயமடைந் தவர்கள் கூறுகின்றனர்.

சம்பவம் நடந்த இடத்தில் கிரனேட் ஒன்றும் வீசப்பட்டது. ஈ.பி.டி.பி. அலுவலகத்தினுள் செல்லமுயன்ற பொலீஸாரின் வாகனம் ஒன்று தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து வந்து கொண்டிருந்த சிறைச்சாலை திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனமும் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டது.

பொலீஸார் வர்த்தக நிலையங்களுக்குள் நுழைந்து வர்த்தகர்களை தேடித்தேடிச் சுட்டனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

நேற்றைய சம்பவங்களில் காயமடைந்தவர்களுக்கு மோசமான காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், பொலீஸார் ரப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்தியே ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர் என்று பொலீஸ் தரப்பில கூறப்பட்டது.

ஈபிடிபியினர் மற்றும் பொலீஸாரை நோக்கி நான்கிற்கும் மேற்பட்ட பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன என்று வடக்கு பிரதிப் பொலீஸ் மா அதிபர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இச்சம்பவத்தில் பொலீஸார் மூவருக்கு காயங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் வீசியவை எனக் கூறி சில பெற்றோல் குண்டுகளை பொலீஸார் மனித உரிமைகள் ஆணைக் குழு அத்காரியிடம் காட்டியிருக்கின்றனர்.

நெல்லியடிப் பகுதியில் நடந்த இந்த களேபரம் காரணமாக ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரும் சிரமங்களை சந்திக்க நேரிட்டது.(ஐ-173-10-15-12-5)


Computer College

கணனிக் கல்லூரி

CC Center for Computer Studies

337, Kasthuriyar Road, Jaffna

E - Mail : collegeofcom@bharatmail.com
Phone & Fax : 021 - 2223497

2004 உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கென கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் தொழில் நுட்ப ( GIT ) பாடத்திட்டத்துக்கான வகுப்புகளை ... முதன்முதலாக ஆரம்பித்த ...

15 - 12 - 2002 ஞாயிற்றுக்கிழமை
காலை - 10.00 மணி
மாலை - 3.30 மணி

ஏனைய புதிய பிரிவுகள் :
Diploma Course :
Dip. in. Microsoft Office
Dip. in. Desktop Publishing
Dip. in. Web Designing

Kids ... ஆரம்பமாகியுள்ளது

Certificate Courses in: இரண்டாவது பிரிவு ஆரம்பம்: 08 - 12 - 2002
Ms - Word, Ms - Excel, Ms - Power point, Ms - Access, Corel DRAW, PageMaker, Photoshop & Internet - E mail.

www.computercollege.ac.lk


# தம்மைக் கொல்லப் பிரதமர் முயற்சி என்று ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.11

தம்மைப் படுகொலை செய்யும் முயற்சியில் பிரதமர் இறங்கியிருக்கிறார். அவர் துப்பாக்கியோடு வந்து ஒத்திசைவாக அரசியல் நடத்துவதற்கு தாம் ஒத்துழைக்காவிட்டால் தம்மைக் கொல்லப் போவதாகப் பயமுறுத்தினார் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

இந்த அரசு பதவியில் இருககும் போது நாடு எப்படி முன்னேறும் என்று ஜனாதிபதி கடந்த ஞாயிற்றுக்கிழமை கேள்வியும் எழுப்பினார்.

இந்த நாட்டின் பிரதமரே ஜனாதிபதியைப் பயமுறுத்துகிறார். உமது ஆள்களை சிறையில் தள்ளிவிடுவேன். அவர்களைக் கொல்வேன். உமது பாதுகாவலர்களையும் சிறையில் அடைப்பேன் என்றும் பிரதமர் மிரட்டுகிறார் எனவும் ஜனாதிபதி குறப்பிட்டிருக்கிறார்.

பிரதமரே துப்பாக்கியுடன் வந்து உன்னைக் கொல்வேன் என்றார். ஆண்டவன் மீது சத்தியமாக சொல்கிறேன் என்றார் ஜனாதிபதி.

- இப்படி பிரபல உலகச்செய்தி நிறுவனங்களில் ஒன்றான ஏ.எவ்.பி. தகவல் வெளியிட்டிருக்கிறது. ஜனாதிபதி இவ்வாறாகப் பேசியதற்கு ஆதாரமாக பேச்சுக் குறிப்புகள் பதிவு செயயப்பட்ட நாடா கைவசம் இருக்கின்றது என்றும் ஏ.எவ்.பி. செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிங்களத்தொலைக்காட்சி ஒன்றில் ஜனாதிபதியின் இந்தக் குற்றச் சாட்டுகள் அடங்கிய பேச்சு, கடந்த திங்கட்கிழமை இரவு ஒளிபரப்பப்பட்டது என்றும் செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதி கூறிய கருத்துகள் பற்றி தம்மால் உடனடியாக ஒன்றும் சொல்ல முடியாது என்று ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கலந்துகொண்ட சில கூட்டங்கள், அரசியல் கூட்டங்கள் போன்றவற்றில் செய்து சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக் கப்படுவதில்லை என்றாலும் சிலர் சென்றிருக்கலாம். நான் கூட்டத்திற்குப் போகவில்லை. பேச்சுப்பதிவு செய்யப்பட்ட நாடாவையும் நான் காணவில்லை என்று அவர் தெரிவித்தார் எனவும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் தேர்தல் தொகுதியான கம்பஹா மாவட்டத்தில் பாடசாலை ஒன்றில் நடந்த புலமைப் பரிசில் விநியோக வைபவத்தில் பிரதமரை குற்றஞ் சாட்டி ஜனாதிபதி பேசினார் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் குற்றச்சாட்டுப் பற்றி அரசாங்கம் இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. அமைச்சரவை தம்மைக்கொலை செய்ய முயற்சி மேற்கொண்டதாக கடந்த செப்ரெம்பரில் ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார்.

"என்னை யாராவது தாக்கினால், நான் திருப்பித்தாக்குவேன். நான் இறப்பதற்கு முன்னர் 500 பேரைக் கொன்றுவிடுவேன்" என்று ஜனாதிபதி கூறினார் எனச்செய்திகள் வந்தன.

இப்படியும் ஏ.எவ்.பி.செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ)

## பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

நேற்று நெல்லியடியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஐபிஸி. நிறுவனத்தின் செய்தியாளர் வே. தவச்செல்வம் தாக்கப்பட்டதை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த செய்தியாளர் ஒருவரை கடமை செய்ய விடாது தடுத்து தாக்கி, காயப்படுத்திய செயலை பத்திரிகைச் சுதந்திரம் மீதான அச்சுறுத்தலாகவே கருதவேண்டி உள்ளது என்று சங்கம் தெரிவித்திருக்கிறது. (ஐ)

## காயமடைந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாதன் (வயது 46) - கரணவாய் தெற்கைச் சேர்ந்த இவர் 'பெயின்ற்' வாங்குவதற்காக வந்த சமயம் கடைக்குள் வைத்து சுடப்பட்டார்.

★ செல்வராசா இந்திரகுமார் (வயது 24) - கரவெட்டியைச் சேர்ந்த இவர் மொடேர்ண் புத்தக நிலையத்தில் பணிபுரிபவர். கடையில் வைத்து முகம், தோள் என்பவற்றில் சுடப்பட்டார்.

★ கதிரவேலு தேவன் (வயது 40) - அல்வாயைச் சேர்ந்த இவர் தனது இரும்புக்கடையை மூடிவிட்டு அவசரமாக கிளம்பிய வேளை சுடப்பட்டார். கையில் காயம்.

★ பொன்னர் அருமைத்துரை (வயது 40) - கரவெட்டியைச் சேர்ந்த இவர் நெல்லியடி மரக்கறிச் சந்தையில் வைத்து தாக்கப்பட்டு காயமடைந்தார்.

★ வல்லிபுரம் மகேந்திரம் (வயது 49) - அல்வாய் வடக்கைச் சேர்ந்த இவர் ஒரு மரக்கறி வியாபாரி. சந்தையில் வைத்து தாக்கப்பட்டதில் காயமடைந்தார்.

★ வேலுப்பிள்ளை தவச் செல்வம் (வயது 34) - செம்பியன்பற்றைச சேர்ந்த இவர் ஒரு செய்தியாளர். செய்தி சேகரிப்பு மற்றும் புகைப்படம் எடுக்கும் பணியில் ஈடுபட்டவேளை சூட்டுக்கு இலக்காகி முகத்திலும் காலிலும் காயங்களுக்குள்ளானார்.

இவர்களை விட மேலும் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகி வடமராட்சி பிரதேச ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றனர். (ஐ-5-12-15-173)

## புற்றுநோய் ஆஸ்பத்திரி திறப்பு

வலி.வடக்கு,டிசெ.11

இராணுவப் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை நேற்றுக்காலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார்.

ஆஸ்பத்திரி அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் உட்பட மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோரே வைபவத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் திறப்பு விழாவுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. (ஐ-86)

## சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ இரா்சரத்தினம் முகுந்தன்
★ சின்னத்துரை கதிர்காமநாதன்
★ தர்மலிங்கம் துவாகரன்
★ சிதம்பரம் ராமலிங்கம்
★ இராசையா ரேகன்
★ துரைராசா ராஜராஜன்
★ ராமச்சந்திரன் பிரேம்நாத்
★ தர்மகுலம் பரம்சோதி குருபரன்
★ தாமோதரம்பிள்ளை ஜெகன்
★ மாணிக்கவாசகர் மனவேதன்
★ அரியகுட்டி ஜெகன்
★ சாமுவேல் மோகனராஜ்
★ கிட்ணர் யோகநாதன்

இதேவேளை -

பொதுமக்கள் மீது பொலீஸார் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து ஏற்பட்ட களேபரத்தின் போது தவறவிட்ட தங்கள் சைக்கிள்களை எடுத்து வருவதற்காக நேற்று மாலை சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற சிலர் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

பொதுமக்களால் கைவிடப்பட்ட ஏழு மோட்டார் சைக்கிள்கள், ஒரு தொகுதி சைக்கிள்கள் என்பனவும் பொலீஸாரால் மீட்கப்பட்டு பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ-5-12-173)


மிக வேகமாக விற்பனையாகின்றது
எழுதுநர் / கிராமசேவகர்
வழிகாட்டி நூல்
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
ஆக்கியோன்:
திரு.P.உமாசங்கர்
சகல புத்தகசாலைகளிலும்
(11629)

விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள
ஹோனியோ இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
10, 2 ஆவது ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Mobile: 077 - 7274462
(11583)

ஈ-சன்
கல்வி நிலையம்
ஆரம்பமாகின்றது
A/L 2005
கலை, வர்த்தக,
கணித, உயிரியல்
பிரிவுகள்
காலம் :-14. 12. 2002 (Sat)
4.30.p.m.
(11608)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.